மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ்.இளங்கோ

பணக்காரர்களிடம் நான் ஒரு போதும் பணம் கேட்கமாட்டேன்! நீங்கள் தான் கொடுக்க வேண்டும்!

சென்னை சிந்தாதிரிப்பேட்டை அறிவு வளர்ச்சி மன்றத்தின் ஆண்டு விழா, 30-4-60ம் தேதி மாலை நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்கு தோழர் ஆடலழகன் தலைமை வகித்தார். அறிஞர் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்ற வந்திருந்தார். அவருக்குப் பல மன்றங்கள் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணுவித்தது. கூட்டத்தில் நகரமன்ற உறுப்பினர்களான ஏ. ஏ. கபாலமூர்த்தி, தி. மணிவண்ணன், சட்டமன்ற உறுப்பினர் பேராசியர் க. அன்பழகன், காஞ்சி சி. வி. இராசகோபால் ஆகியோர்கள் பேசினர்கள்.

கோட்டைக்குள் படை புகுவதை அறிவிக்கும் டாங்கி படைகளின் சத்தமே— நீங்கள் குலுக்கும் உண்டியல் சத்தமாகும்!

பின் அறிஞர் அண்ணா அவர்கள் மக்களின் ஆரவாரத்துக்கிடையிலும், கை ஒலிகளுக்கிடையேயும் பேச எழுந்தார். அண்ணா அவர்கள் பேச எழுந்ததும் பல பக்கங்களிலிருந்து உண்டியல் குலுக்கிக் காண்பிக்கப்பட்டது.

அவர் பேசியதாவது:—

அன்புள்ள தலைவர் அவர்களே! அருமை நண்பர்களே, தாய்மார்களே. தோழர்களே!

இந்த வட்டத்தில் அறிவு வளர்ச்சி மன்றம் ஒன்று துவக்கி நமது திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைமன்றமாக இருந்து இந்த வட்டத்தில் நல்ல பணியாற்றி வருவது கண்டு மகிழ்கிறேன். நான் இன்று இங்கு ;பேசுவதற்கு வாய்ப்பளித்த இம்மன்றத்திற்கு எனது நெஞ்சுகந்த வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்!

கோட்டைக்குள் வீரர்களை அனுப்ப தினமும் உண்டியலில் காசு போடுங்கள்!

சிந்தாதிரிப்பேட்டையில் அறிஞர் அண்ணா போர்ப்பரணி!

இந்த சிந்தாதிரிப் பேட்டை பல ஆண்டுகளாகவே நமது இயக்கத்திற்கு ஆதரவு தந்து வந்த பேட்டையாகும். சமுதாய சீர்திருத்த பணிகள் செய்வதற்கும், மக்களிடம் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்வதற்தும் அரும் பணியாற்றி வந்த நமது சுயமரியாதை இயக்கத்திற்கும் இந்தப் பேட்டை ஒரு கோட்டையாக இருந்தது, அப்பொழுது இந்த சிந்தாதிரிபேட்டையில் பல நண்பர்கள் பல இடையூறுகளுக்கிடையில் பணியாற்றி வந்தார்கள்.

அன்று சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை சென்னையில் பணியாற்றி வந்த பெருமை சிந்தாரிப்பேட்டைக்கும் பெத்து நாய்க்கன் பேட்டைக்குமே உரித்தாகும். இந்த சிந்தாதரிப்பேட்டையில் தான் நமது அரசியல் கொள்கைகளை நல்ல முறையில் பரவுவதற்கு அந்தக் காலத்தில் பல நண்பர்கள் பாடுபட்டார்கள்!

அன்று சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டு உழைத்த வாலிபர்களெல்லாம், இன்று பெரியவர்களாகிய. ஐம்பது ஐம்பத்தைந்து, அறுபது வயதுடையவர்களாகக் காணப்படுகிறார்கள்.

அன்று சிறுவர்களாக—கட்டிளம் காளைகளாகத் திகழ்ந்தவர்களெல்லாம் இன்று வயதடைந்தவர்களாகக் காணப்படுகிறாகள்.

இந்த வட்டம் கடந்த காலங்களில் அதாவது திராவிடர் கழகமாக இருந்த காலத்திலாயினும் சரி, இந்தி எதிர்ப்பு காலத்திலாயினும் சரி நமக்கு நல்ல ஆதரவு கொடுத்து பணியாற்றி வந்திருக்கிறது!

நாம் திராவிடர் கழகத்திலிருந்த போது நமது முன்னாள் தலைவர் பெரியார் அவர்கள் "விடுதலை" பத்திரிகையை சென்னைக்குக் கொண்டு வர விரும்பினார். அப்போது சென்னையில் அலுவலகம் வைக்க இடம் பார்க்கப்பட்டது! அப்போது நமது பெரியார் அவர்கள் சென்னையில் பாலகிருஷ்ணம் பிள்ளைத் தெருவிலுள்ள காலி கொட்டகையைப் பார்க்கும்படி எனக்கும் நமது பொன்னம்பலனாருக்கும் தெரிவித்தார். அதன்படியே இப்பொழுது விடுதலை இருக்கும் இடத்தைப் பார்த்

[5-ம் பக்கம் பார்க்க]

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 — 15-5-60 — ஒலி 28

அடுத்த மந்திரிசபை
தி.மு.க. மந்திரிசபை

நமது பெருமதிப்பிற்குரிய பேரறிஞர் அண்ணா அவர்கள், கழகத் தோழர்களுக்கு இட்ட அன்புக் கட்டளையை செயல் வடிவாக்கி — "அனைவருமே உண்டியல் வைத்து, தேர்தல் நிதியைச் சேர்க்கத் தொடங்கி விட்டார்கள்" என்று நாடெங்கிலுமிருந்து வரும் நல்ல செய்திகள் நம்மை பெருமகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றன!

தமிழகத்தின் இதயம் கவர்ந்த பேரறிஞர், அண்ணா என்ற பாசத்தால் நாட்டையே ஆட்கொண்ட பெருமையாளர்—சென்ற ஆண்டு நவம்பர் திங்கள் இந்த அன்புக் கட்டளையை பிறப்பித்தார்கள்! ஏறத்தாழ ஆறு ஏழு மாதங்கள் தான் ஆகின்றன! அதற்குள் "நான் இவ்வளவு ரூபாய் சேர்த்தேன், அவர் அவ்வளவு ரூபாய் சேர்த்தார்" என்ற செய்தி தினம், தினம் வந்த வண்ணம் இருக்கின்றன!

கழகத் தோழர்கள் செய்து வரும் இந்த பெரு முயற்சி தொடர்ந்து நடைபெறுமானால், இடையிலே துவளாது, அலுப்பும், சலிப்பும் கொள்ளாது நடைபெறுமானால், அடுத்த ஆட்சி காங்கிரஸ் ஆட்சியல்ல—கழகத்தின் ஆட்சி தான்! இது உறுதி, இது உறுதி!

நம்மை யெல்லாம் ஆட்கொண்ட—அன்பாலும், பாசத்தாலும் நம்மை யெல்லாம் தம்பிகளாக்கிக் கொண்ட அறிவுலக மேதை அறிஞர் அண்ணா அவர்கள், உண்டியல் வைத்துத் தேர்தல் நிதியைச் சேர்க்கச் சொன்ன போது—இந்த நாட்டு பூமான்களும், சீமான்களும் கேலி செய்தார்கள்—"ஆண்டிகள் மடம் கட்டப் போகிறார்களாம்" என்று கிண்டல் செய்தார்கள்!

"அள்ளி அள்ளித் தரும் டாட்டா, கொட்டி கொட்டி குவிக்கும் பிர்லா—"இலட்சமா, கோடியா" என்று கேட்கும் ஆலையரசர்கள் முன்பு இந்த சில்லறைகள் எம்மாத்திரம்! இலட்சம் எங்கே, அரைக் காசு எங்கே! கோடி எங்கே, ஒரு காசு எங்கே" என்று பரிகாசம் செய்தவர்கள் தலைகுனிய உண்டியலை நிரப்புங்கள்!

ஒவ்வொரு கழகத் தோழர்களும் தினம், தினம் ஒரு காசு சேர்த்தால் டால்மியா நம்மிடம் பிச்சை வாங்க வேண்டும், டாட்டா நம்மிடம் யாசகம் கேட்க வேண்டும்!

கழக உறுப்பினர்களில் ஒரு இலட்சம் பேர், கொஞ்சம் வசதி படைத்தோர் செலவில் சிக்கனம் பிடித்து ஒரு காசு வீதம் சேர்த்தாலே போதும் இந்த ஆட்சியை பஞ்சாய் பறக்கடித்து விடலாம்!

செங்கோலைக் கையில் ஏந்தாமல், பாராளுமன்றத்தில் அமர்ந்து ஆட்சி புரியாமல் நம்மை யெல்லாம் ஆட்சி புரிந்து வரும் நாவரசர் அறிஞர் அண்ணா அவர்கள் கூட்டம் தவறாமல் கூறிவருவதை கொஞ்சம் கவனித்தால் எளிதாக, சுலபமாக இலட்சம், இலட்சமாகத் திரட்ட முடியும்! "பத்து சிகரெட் பிடித்தால் இனி ஒன்பது சிகரெட் பிடியுங்கள், இரண்டு தரம் காப்பி சாப்பிட்டால் இனி ஒரு தரம் காப்பி சாப்பிடுங்கள், தினம் தினம் சினிமாவிற்குச் சென்றால், இனி இரண்டு தினங்களுக்கு ஒரு தரம் சினிமாவுக்குப் போங்கள்! "இப்படி இரண்டு வருடங்களுக்கு கொஞ்சம் மனதைக் கட்டுப் படுத்தி சிக்கனம் பிடித்தால் அடுத்து நிம்மதியான வாழ்வைப் பெறலாம்!

நாம் நினைத்தால் எத்தனையோ வழிகளில், எத்தனையோ முறைகளில் பணத்தைச் சேர்க்க முடியும்! நாடகமாடலாம், நாட்டிய விருந்தளிக்கலாம், இசை நிகழ்ச்சி நடத்தலாம். ஓவியம் வரைந்து பொருள் ஈட்டலாம்! எல்லோருமே நம்மிடம் இருக்கிறார்கள்!

சினிமா உலகில் பெரும் புகழ் படைத்தவர்கள், மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தவர்கள் நம்மிடம் ஏராளமாக இருக்கிறார்கள்!

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், நினைத்தால் இலட்சம், இலட்சமாக தேர்தல் நிதி சேர்க்க முடியும்! அதே போல் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராஜேந்திரன் நினைத்தால், அதே போல் மற்ற மற்ற நடிகர்கள் நினைத்தால் யாரையும் விட பெரும் பொருளை திரட்ட முடியும்!

எப்படியோ, எந்த வழியிலோ கண்ணும் கருத்துமாக இருந்து பெரும் செல்வத்தைத் திரட்ட வேண்டும்!

சென்ற தேர்தலில் நாம் பணம் இல்லாமல் பட்ட கஷ்டத்தை, அடைந்த தொல்லையை நன்றாக உணர்வோம்! பணம் இருந்திருந்தால் இன்னும் எத்தனையோ இடங்களைப் பிடித்திருக்க முடியும்!

கார் இல்லாமல், வண்டி இல்லாமல் எத்தனையோ மைல்களை கடந்து ஓட்டளித்த திராவிடப் பெருங்குடி மக்களைப் பற்றி நாம் நன்றாக அறிவோம்!

இனியும் இந்த நிலை நமக்கு இருக்கக் கூடாது!

நமக்கிருக்கும் முதல் பிரச்சினையை தெளிவாக அனைவரும் உணர வேண்டும்! முதலில் பொருளாதார நிலையை சரி செய்து கொள்ளாவிட்டால் எதையும் சாதிக்க முடியாது! இதைத் தொண்டர்கள் மட்டும் உணர்ந்தால் போதாது! தலைவர்களும் உணர வேண்டும், பேச்சாளர்களும் உணர வேண்டும், எழுத்தாளர்களும் உணர வேண்டும்! அனைவரும் உணர்ந்து முழுமூச்சாக நிதி சேர்க்கும் பணியில் ஈடுபட வேண்டும்!

வருகிற தேர்தல் எளிதாகவோ, சுலபமாகவோ இருக்காது, நிச்சயமாக இருக்காது! பெரும் செல்வாக்குப் படைத்தவர்களோடு நாம் போட்டியிட வேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்!

நமக்கு என்ன தான் ஆதரவு இருந்த போதிலும், நமக்கு என்ன தான் சலியாது, எதையும் எதிர்பாராமல் உழைக்கும் தொண்டர்கள் இருந்த போதிலும் பணம் இல்லை என்றால் எல்லாமே வியர்த்தமாகிவிடும்!

நண்பர்களே! கழக வீரர்களே! இளைஞர்களே! நாம் இதுவரையில் சலியாது உழைத்த உழைப்புக்கு பலன் கிடைக்க வேண்டுமானால்—சொல்லடிப் பட்டோமே கல்லடிப் பட்டோமே ரத்தத்தைக் கொட்டினோமே, உயிரைத் தத்தம் செய்து கொடுத்தோமே—ஆட்சியாளரின் அடக்குமுறைக்கு ஆளான போது, 'அப்பா, அம்மா' என்று கத்தாமல்—"வாழ்க தாயகம், வாழ்க திராவிடம்" என்று முழங்கினோமே அவைகள் அத்தனைக்கும் பலன் கிடைக்க வேண்டுமானால் அடுத்த தேர்தலில் நாம் வெற்றி பெறுவது தான் வழியாகும்!

வெற்றி என்பது ஓடி வந்து நம்மை அணைத்துக் கொள்ளாது! உழைக்க வேண்டும், கடுமையாக உழைக்க வேண்டும், சில சமயங்களில் உறங்காமலும், உண்ணாமலும் கூட உழைக்கவேண்டும்! இதனைச் செய்திட்டால் அடுத்த மந்திரிசபை கழகத்தின் மந்திரி சபைதான் என்பதை நிச்சயமாக நம்பலாம்! இதற்கான வழிவகைகளை உடனே செய்யுங்கள்!

இதுவரையில் உண்டியல் வைத்து நிதியைச் சேர்த்தவர்கள் எவ்வளவு சேர்த்திருக்கிறீர்கள் என்பதை தெரிவியுங்கள்! மாலைமணியில் வெளியிட்டு உங்கள் உழைப்பைப் பாராட்டுகிறோம்! உண்டியல் வைக்காதவர்கள் உடனே உண்டியலை வைத்து எழுதுங்கள்!

நம்மைப்பற்றி நமது அண்ணா பெருமையாகப் பேசுகிறார்கள்—"யாருக்கும் கிடைக்காத தம்பிகள் எனக்குக் கிடைத்திருக்கிறார்கள்" என்று உள்ளம் பூரித்து மகிழ்ச்சியடைகிறார்கள்! "வெட்டிவா என்றால் கட்டி வருபவர்கள் என் தம்பிகள்" என்று புகழ்ந்து, புகழ்ந்து பாமாலை சூட்டுகிறார்கள்! அதை நிறைவேற்றித் தருவது நமது கடமை!

"கழகத் தோழர்கள் கடமை வீரர்கள், எதையும் சாதிக்கும் வல்லவர்கள்" என்பதால்—நீங்கள் உண்டியல் வைப்பீர்கள், பெரும் செல்வத்தைத் திரட்டித் தருவீர்கள் என்று நம்பி—"அடுத்த மந்திரிசபை தி. மு. க. மந்திரி சபை தான்" என்று தமிழகக்குடி பெருமக்களுக்கு, மகிழ்ச்சியோடும், பூரிப்போடும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்!

தாளமுத்து-நடராஜன் தியாகத்தாலே நாட்டு விடுதலை மலர்ந்தது!

எல்லா சக்திகளையும் படைத்த ஆச்சாரியாரே அழிக்க முடியவில்லையென்றால்—இவர்களாலா நம்மை அழிக்க முடியும்?

சூழ்ச்சியும்-வஞ்சகமும்-பிரித்தாளும் தன்மை கொண்டு காமராசர் நம்மை அடக்கப் பார்க்கிறார்!

சென்னையில் நாவலர் நெடுஞ்செழியன் முழக்கம்!

சென்னை 49-வது வட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணை மன்றமாக இருக்கும் தாளமுத்து—நடராஜன் படிப்பகத்தின் சார்பில் 5-5-60ம் தேதி மாலை 7-மணிக்கு ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு இயக்கத்தின் பிரச்சாரகர்களில் ஒருவரும், அந்த வட்டத்தில் மாநகராட்சி மன்ற தேர்தலுக்கு நின்றவருமான தோழர் அன்புரோஸ் தலைமை வகித்தார்.

கூட்டம் ஆரம்பிப்பதற்குமுன் பலதோழர்கள் இயக்கப் பாடல்களைப் பாடினார்கள்.

தலைவர் அன்புரோசு பேசுகையில் கூட்டம் நடத்துவதற்கு ஏற்பட்ட தொல்லைகளைப் பற்றியும, இந்தப் பேட்டையில் தான் தேர்தலில் நின்ற போது பணியாற்றியவர்களைப் பாராட்டியும் பேசினார்.

பின் சட்ட மன்ற உறுப்பினர் சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் இயக்க வளர்ச்சியைப் பற்றியும், நகர மன்றத்தில் நாம் ஆற்றும் பணிகளைப் பற்றியும், மாற்றார் தூற்றலைப் பற்றியும பேசினார்!

பின்னர் மாநகராட்சி மன்ற திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் என், ஜீவரத்தினம் கடந்த ஓராண்டுகளில் நகர மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் செய்த பணிகளையும் மாற்றார் தூற்றுதலைப் பற்றியும் விளக்கிக் கூறினார்.

பின் மாநகராட்சி மன்றத் தலைவருக்கும் துணைத் தலைவருக்கும் பாராட்டு இதழ் கொடுக்கப்பட்டு, மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும், அணுவிக்கப்பட்டது. தலைவரும், துணைத் தலைவரும் பாராட்டுக்கு நன்றி தெரிவித்து நகர மன்றத்தில் ஓராண்டு பணிகளை விளக்கினார்கள்.

அடுத்து பொதுச் செயலாளர் நாவலர் இரா நெடுஞ்செழியன் எம். ஏ, அவர்கள் பேசியதாவது:—

அவைத் தலைவர் அவர்களே! சென்னை மாநகராட்சி மன்றத் தலைவர்—துணைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்களே! தொழிலாளித் தோழர்களே! உங்கட்கெல்லாம் நான் முதன் முதலாக மே நாள் வாழ்த்தும் வணக்கமும் தெரிவித்துக் கொள்கிறேன்!

தாளமுத்து நடராஜன் வாசகசாலையினர் எனக்கு இன்று இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை நல்கியதற்காகவும், மற்றும் பல நண்பர்கள் என்பால் அன்பும், பாசமும் கொண்டு கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும், உதய



சூரியன் சின்னம் பொறிக்கப்பட்ட பதக்கம் ஒன்றும், தாய்மார்கள் தலையில் அணியக்கூடிய ரோஜா மலரும் (பிளாஸ்டிக்) அன்பளிப்பாக அளிக்கப்பட்டதற்காகவும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் திராவிட முன்னேற்றக் கழகம் இன்று நாட்டில் நல்ல முறையில்பணியாற்றி வருகிறது அது ஈடுபட்டுள்ள பணியில் மக்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்! அதை வைத்தே நமது கூட்டங்களுக்கு ஏராளமான மக்கள் வந்து கூடுகிறார்கள்!

எனக்கு முன் பேசிய நண்பர்களும். மாநகராட்சி மன்றத் தலைவரும் துணைத் தலைவரும் தாங்கள் செய்த பணிகளை நன்கு விளக்கினார்கள்!

இங்கு கூட்டத்தைக் கூட்டுவித்துள்ள தாளமுத்து நடராஜன் படிப்பகம் நமது கழகத்தின் துணைச் சார்பு மன்றம்.

நான் தான் இந்த மன்றத்தைத் துவக்கியதாக நினைவிருக்கிறது. மீண்டும் என்னை இன்று அழைத்து கூட்டம் நடத்துகிறார்கள்!

அப்படிப்பட்ட நண்பர்களுடைய நல்ல உள்ளத்தையும், அவர்கள் கழகத்தின் பால் கொண்டுள்ள உறுதிப்பாட்டையும் பாராட்டுகிறேன்.

இந்த மன்றத்திற்கு "தாளமுத்து நடராஜன் மன்றம்" என்று பெயரிடப்பட்டிருக்கிறது

இது மிகவும் பொருத்தமான பெயர்.

மொழி பற்றுடன், மொழிக்கு ஆபத்து வந்த நேரத்தில், அதாவது திரு. சி. ராஜகோபாச்சாரியார் முதலமைச்சராக இருந்த போது கட்டாய இந்தியைக் கொண்டு வந்த போது அதை எதிர்த்து, சிறை சென்று, சிறையில் நல்ல முறையில் கவனிக்காததால் தங்களது அருமையான உயிரை இழந்தார்கள்! மொழிக்காக தங்களது உயிரைப் பணயம் வைத்த உத்தமர்கள் இருவரின் பெயரை இந்த மன்றத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறது.

தங்களுடைய தாய் மொழிக்கு இன்னல் வந்திருக்கிற தென்றதும், மனைவி மக்களை மறந்து, உற்றார் உறவினரைத் துறந்து, மொழிக்கு இன்னல் கொடுத்த அந்த அன்னிய மொழியை எதிர்த்தார்கள்.

மொழியைப் புகுத்தி அரசியல் ஆதிக்கம் செலுத்த முனைந்த அக்கிரமத்தை எதிர்த்துப் போராடினார்கள். வழக்கு தொடுத்து நீதி மன்றத்திற்கு அழைத்துச் சென்று, அங்கு தண்டனை கொடுக்கப்பட்டு, தண்டனையை நிறைவேற்ற சிறைக்குக் கொண்டு போகப்பட்டு சென்னை சிறைச்சாலையில் தங்களது இன்னுயிரைத் துறந்தார்கள்.

தன்மானத்துடன், மொழிப் பற்றுடன், தாய் மொழியைக் காப்பாற்ற உறுதியுடன் போராட வந்த இரண்டு வீரர்களை உயிருடன் சிறைக்கனுப்பினோம்!

ஆனால் அன்று ஆச்சாரியார் நமக்கு இரண்டு பிணங்களைத் தந்தார்! சிறைவாயிலில் இரண்டு பிணங்களைப் பெற்றோம்!

. வீரத்தோடு, தாய் மொழியைக் காப்பாற்ற எதுவும் செய்வேன் என்று சூளுரை உரைத்து உயிருடன் சென்ற இரு செம்மல்களை நாம் பிணமாகப் பெற்றோம்!

அன்று முதலமைச்சராக இருந்த ஆச்சாரியாரை தமிழ் பற்றுடைய வரும், அன்று சட்ட மன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவரும், நம்முடைய அருமை நண்பருமான சர் ஏ.டி. பன்னீர் செல்வம் அவர்கள் கேள்வி கேட்டார்,

"இந்தியை எதிர்த்து இரு வாலிபர்கள் சிறை சென்றார்களே, சிறையில் மரண மடைந்தார்களே அதற்குக் காரணம் என்ன என்று அவர் கேட்டார்!

அதற்கு அன்றைய முதலமைச்சர் ஆச்சாரியார் ஆணவமாக

(4ம் பக்கம் பார்க்க)

நாம் கொடுக்கும் வரியைக் கொண்டு வடநாடு வளர்கிறது!

(நெடுஞ்செழியன் பேச்சு)
(4-ம பக்கத் தொடர்ச்சி)

பதில் சொன்னர்.

"சிறையில் மாண்ட தாளமுத்து நடராஜன் படிக்காததாலேயே மாண்டார்கள், என்று பதில் கூறினர்,

இந்த வியாக்கியாத்தின் பொருள் என்ன?

"தாளமுத்து நடராஜன் என்ற இரு வாலிபர்கள் படிக்காத பாமரர்கள், படிக்காததால் அந்த இயக்கத்தில் சேர்ந்தார்கள், சேர்ந்ததால் போராட்டத்தில் ஈடுபட்டார்கள் அதன் பயனுகத் தண்டனை பெற்ருர்கள். சிறை சென்ருர்கள்! சிறையில் மாண்டார்கள்," என்பதாகும் படித்திருந்தால் எதிர்க்க மாட்டான் இப்படி அகந்தையாக—ஆணவமாக சட்ட மன்றத்தில் அன்று ஆச்சாரியார் பதிலளித்தார்.

அன்று மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டு, பல இன்னல்களுக்காளாகி உயிர் துறந்த மாவீரர்களின் தியாகத்தால் அவர்கள் போட்ட வித்தால் இன்று நாட்டுப் பற்று ஏற்பட்டு, அடிமைப்பட்டிருக்கும்—இழந்திருக்கும் நமது நாட்டை விடுதலை பெற பாடுபட்டு வருகிருேம்!

நம்மையும். நமது கழகத்தையும் தாக்கும் மாறறுக் கட்சியினர் இன்று சென்னை நகரம் நாறுகிறது. கொசுத் தொல்லைகள் அதிகரிக்கிறது என்று கூறுகிருர்கள்!

முன்பெல்லாம் நகரம் நாற்ற மெடுக்காதிருந்தது போலும் இப்போது நாம் ஆட்சிப் பொறுப் பேற்ற பின் புதிதாக நாறுவது போலவும், முன்பெல்லாம் கொசுக்கடி இல்லாதது போலவும் இப்போது கொசுக்கடி இருப்பது போலவும் குறை கூறி வருகிருர்கள்!

குறை கூறுபவர்கள் கூறட்டும் அது பற்றி நாம் கவலைப் பட வேண்டாம்.

நாம் என்னமோ கொசுக்களை வளர்த்து, அதை நகரில் விட்டது போன்றும், முன் நகரில் நாற்றமெடுக்காதது போலவும் இப்போது நாற்ற மெடுத்து வருவது போன்றும் பொய்யைப் புனைந்து கூறி வருகிருர்கள்.

கூவம் நதி இப்போது புதிதாக நாற்ற மெடுப்பது போலவும் கூறி வருகிருர்கள்!

இதை சென்னை மக்கள் சிந்தித்திப பார்க்க மாட்டார்களா? பொது மக்கள் முன் பிருந்ததையும் இன்றிருப்பதையும் சிந்தித்துப் பார்க்க மாட்டார்களா?

இரண்டையும் ஒன்று படுத்தி மக்கள் பார்க்க மாட்டார்களா? ரஷ்யாவிலிருந்தோ, அல்லது வேறு நாட்டிலிருந்தோ புதிதாக வந்தவர்களிடம் கூறலாம்! அவர்கள் வேண்டுமானுல் நம்பலாம் இங்கேயே இருப்பவர்களிடம் கூறினுல் அவர்கள் நம்புவார்களா? பொது மக்கள் குறை கூறினுல் அச்சப்பட வேண்டியது தான். மாற்றுக் கட்சிக்காரர் கூறுவதைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்

1960, வருடத்தில் தான் நகரில் இந்தக் குறை இருக்கிறது. அதற்கு முன் இல்லை என்று பொது மக்கள் எண்ணுவார்களா?

நமது தோழர்கள் நகர மன்றத்தில் செய்த பணிகளைப் பற்றியும், வரி வசூலிப்பதைப் பற்றியும் விளக்கமாக கூறினுர்கள்!

நமது மாநகராட்சி மன்றத் தலைவரும் துணைத் தலைவரும் விளக்கமாகவும் விரிவாகவும் உங்களிடம் கூறினுர்கள்!

நமது கூட்டங்கள பல பகுதிகளில் நடைபெற்று வருகிறது. பத்தாயிரக் கணக்கான மக்கள் கூடுகிருர்கள் அதில் நமது பணிகளை, நமது கருத்துக்களைக் கேட்கிருர்கள்! அவர்கள் தெரிந்து கொள்ள மாட்டார்களா, அவர்கள் ஏசும் வரை ஏசட்டும் நாம் ஏச வேண்டாம் மக்களே உணர்ந்து கொள்வார்கள்,

நமது நகர மக்கள் முன்பெல்லாம் மேயர்கள் யார் என்பதை கேள்விப்பட்டிருக்கிருர்கள்! இன்று அன்ருடம் நேரில் கண் முன் காண்கிருர்கள்!

நகர மன்ற உறுப்பினர்கள் தேர்தல் காலத்தில் தான் சந்திப்பார்கள். தேர்தலில் வெற்றி பெற்ற பின் மக்களைப் பார்க்க மாட்டார்கள். அடுத்த தேர்தல் வரும் போது தான் வருவார்கள்.

நமது தோழர்கள் அப்படியல்ல. தினம், தினம் மக்களைச் சந்திக்கிருர்கள். நமது மேயர்கள் தினம் வட்டத்துக்கு வட்டம் செல்லுகிருர்கள், தினம் தினம் பாராட்டப்படுகிருர்கள்.

முன்பெல்லாம் மேயர்கள் கன்னிமரா ஓட்டல், காஸ்மாப்பாலிடன் கிளப், ராஜாசர் முத்தையா செட்டியார் அரண்மனை இவைகளில் பாராட்டப்படுவார்கள்.

இன்ருே, மக்கள் கூடுகின்ற இடங்களிலெல்லாம், ஏழை மக்கள் வாழுகின்ற இடங்களிலெல்லாம் பாராட்டப்படுகின்றனர்.

கூவம் நதி நாற்றம் எடுக்காது ஒரு காலத்தில் இருந்தது! பச்சையப்பமுதலியார்காலத்தில் கூவம் நதி நாருது இருந்ததாகவும் அவர் தினம் காலை 5-30 மணிக்கு அதில் குளித்து தனது கடமைகளைச் செய்ததாகவும் வரலாறு இருக்கிறது.

நமது மேயர் அவர்கள் கூவம் நதி நாற்றத்தின் காரணத்தையும் கூறினர். இந்த நாற்றம் இன்று நேற்று ஏற்பட்டதா ஏன் இதற்கு முன் இருந்தவர்கள் கவனிக்கவில்லை! ஓராண்டிற்கு முன் வந்த நம் மீது ஏன் குறை கூறுகிருர்கள்,

இன்று சென்னை நகரில் இருக்கும் நிலை யென்ன? மக்கள் பெருக்கம் அதிகம் அதற்கேற்ற படியான வசதிகள் இல்லை!

பல ஆண்டுகளுக்கு முன் போடப்பட்ட திட்டத்தின் படி தான் கழிவு நீர் திட்டமும் தண்ணீர் திட்டமும் இருக்கிறது.

7 லட்சம் மக்களுக்குப் போதுமானதாகத் திட்டபபட்ட திட்டம் இன்று 20 லட்சம் மக்களுக்குத் தேவைப்படுகிறது. இதுவரை நகர மன்றத்திலிருந்தவர்கள் எதுவும் செய்யவில்லை.

நமது தோழர்கள் வந்த பின் அதற்கான வழிவகைகளைச் செய்து வருகிருர்கள். சர்க்கார் நமது தோழர்கள் தீட்டும் திட்டங்களுக்கு உதவுவதுமில்லை. இந்த நிலையில் நமது தோழர்கள் நல்ல பணிகளைச் செய்து வருகிருர்கள். அப்படிச் செய்தும் நமது தோழர்களைத் தூற்றுகிருர்கள்.

நம்முடைய தோழர் ஜீவரத்தினம் அவர்கள் பேசும் போது ரோட்டுகள் போடுவது பற்றியும் கழிவு நீர் விஷயத்தைப் பற்றியும், தண்ணீர் திட்டத்தைப் பற்றியும் உங்களிடம் எடுத்துக் கூறினர்.

நமது கழகம் இன்று நாட்டு மக்களிடத்தில் எவ்வளவு இடையூறுகளுக்கிடையில் பணியாற்றி வருகிறதென்பதை நீங்களறிவீர்கள்.

நாம் மாநகராட்சி மன்றத் தேர்தலில் நின்ற போதே நம்மை கேலி செய்தார்கள் நாம் வெற்றி பெறமாட்டோம் என்றும், நமக்கு மக்களிடம் செல்வாக்கில்லையென்றும் கூறி வந்தார்கள்.

நாம் நகரமன்றத் தேர்தலில் போட்டியிட்டோம், நாம் இவ்வளவு பேர்கள் நகரமன்றத்திற்கு வருவோம். என்று எதிர் பார்த்தோமா? பத்துப் பதினைந்து பேர்கள் வருவோம் என்று தான் நாங்களெல்லாம் நினைத்தோம். ஆனுல் நாம் எப்படி நாற்பத்தைந்து பேர்கள் வந்தோம்.

யாராவது எதிர் பார்த்தார்களா?

நாம் நகராட்சி பொறுப்பை ஏற்கமாட்டோம் என்று எண்ணினுர்கள்.

ஆனுல் நமது தோழர்கள் நாற்பத்தைந்து பேர்களுடன் பொதுவுடமைத் தோழர்களின் ஆதரவாலும், சுயேச்சையாளர்கள் இருவரின் ஆதரவாலும் நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ருேம். எப்படியேற்ருேம்.

முதல் மேயராக நமது அரசுவும், இரண்டாவது மேயராக நமது காதரும் வந்தார்கள்.

எப்படி வர முடிந்தது.

எல்லா அதிகாரங்களையும் கையில் வைத்திருக்கும் சென்னை சர்க்கார் அவர்கள் கையிலிருந்தது, மத்திய சர்க்கார் அவர்கள் கையில் இருந்தது. இருந்தும் எப்படி நாம் வெற்றி பெற முடிந்தது அதிகாரம், பணம் இவைகளெல்லாம் இருந்தும் நாம் எப்படி மாநகராட்சி மன்றத்தைக் கைப்பற்ற முடிந்தது?

அது மட்டுமா? தேர்தல் தந்திரம், சூழ்ச்சியும் சூதும் நிறைந்த காமராசர் இருந்தும் எப்படி நாம் வெற்றியடைய முடிந்தது?

காமராசரைப் பற்றி உங்களுக்குத் தெரியும் தேர்தல் பணிகளில் அவர் ஒன்ருக இருப்பவர்களைப்பிரிப்பது, மிரட்டல் காரியங்களைச் செய்வது. சிண்டு முடிப்பது, பிரித்து விடுவது போன்ற காரியங்களில் அவர் வல்லவர்.

அப்படிப்பட்ட காமராசர் இருந்தும் மாநகராட்சிப் பொறுப்பை ஏற்ருேம்.

பொறுப்பை ஏற்று வரி கொடுக்காது ஏமாற்றி வந்தவர்களுக்கு வரி விதித்தோம் அண்ணுமலை மன்றத்திற்கு குறைவாகப் போடப்பட்டிருந்த வரியை உயர்த்தினேம் பலதொழில் நிலையங்களுக்கு இருந்த குறைந்த தண்ணீர் வரியை உயர்த்தினேம் எப்படி முடிந்தது?

அதிகார வலிவும், ஆதிக்க வசதியும், பண வலிவும் கொண்ட காமராசர் பல தேர்தல்களில் வெற்றி பெற்ருர். நாம் தோல்வியுற்ருேம். ஏன்?

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த காமராசர் என்ற பெயரால் தேர்தல் பிரச்சாரத்திற்குச் சென்றிருந்தால் நமக்குக்கவலையில்லை!

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த கக்கன் என்ற முறையில் தேர்தல் பிரச்சாரத்திற்குச் சென்றிருந்தால் நாம் அது பற்றி வருந்த மாட்டோம்.

அதே போன்று சி சுப்பிரமணியமோ,பக்தவச்சலமோ சென்றிருந்தால் எதுவும் கூற மாட்டோம் ஆனுல் "மந்திரி காமராசர், மந்திரி கக்கன்" மந்திரி பக்தவத்சலம் என்று செல்வதைத் தான் கண்டிக்கிருேம். தங்கள் அதிகாரத்தையும் பதவியையும் துஸ்பிரயோகம் செய்து சர்க்காரின் பேட்டாவை வாங்கிக் கொண்டு. சர்க்கார் அதிகாரிகளை உடன் அழைத்துச் செல்வதைத் தான் நாம் எதிர்க்கிருேம்.

ஜனநாயகம் பேசும் இவர்கள் ஜனநாயகத்தைக் கொலை செய்கிருர்கள். ஏன் இப்படிச் செய்கிருர்கள்.

காமரசர் பெரிய அரசியல் தத்துவ ஞானி என்பதாக நினைத்து பயப்படவில்லை, இவர் சென்று அரசியல் கருத்துக்களை புட்டுப் புட்டு வைத்து மக்களைத் தன்வயப்படுத்தி விடுவாரென்று அஞ்சவில்லை!

இவருடைய அரசியல் கருத்துக்களை சூயென்லாய், மாசேதுங், டிகால், நாசர் இவர்களெல்லாம் இவரிடம் வந்து அரசியலைக் கற்றுக் கொண்டு போகும் செம்மல் என்று கருதி நாம் இவரைக் கண்டு பயப்படவில்லை!

இவர் சூழ்ச்சியும் வஞ்சகமும் தந்திரமும பிரித்தாளும் கொள்கையும், பணமும், பதவியும் ஆட்சியும் கொண்டே தமிழ் நாட்டில் காங்கிரசை வளர்த்து வருகிருர்.

அதற்காகத் தான் இவருக்கு முதன் மந்திரி பதவி கிடைத்தி

(9-ம் பக்கம் பார்க்க)

காங்கிரஸ் கட்சி என்னை வருந்தி, வருந்தி அழைத்தது !

மந்திரி வேலை தருவதாகவும் ஆசைக்காட்டிற்று !

(அண்ணா பேச்சு)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தோம். அன்றும் சிந்தாரிப் பேட்டை நமக்குக் கோட்டை யாக இருந்தது. இன்றும்நமக்குக் கோட்டையாக இருக்கிறது.

பெரியார் அவர்கள் அந்தக் காலத்தில் சென்னை வந்தால் தங்குகின்ற இடம் சிந்தாதிரிப் பேட்டை தான். அந்த சிந்தாதிரிப் பேட்டையில் அன்று திராவிடர் கழகத்திற்கு எப்படி மக்கள் ஆதரவு கொடுத்தார்களோ, அதே போல் இன்று நமது முன்னேற்றக் கழகத்திற்கும் பெரும் ஆதரவு கொடுத்து அதன் வளர்ச்சியில் மிகவும் பங்கு கொண்டு உழைக்கிறார்கள்!

நாம் சென்ற பொதுத் தேர்தலில் பல இடங்களில் நமது அபேட்சகர்களை நிறுத்தினோம்! அதே போன்று இந்தப் பகுதியிலும் நமது அபேட்சகரை நிறுத்தினோம்! அதாவது நமது அன்பழகனை நிறுத்தினோம். அப்போது இந்தப் பேட்டையிலுள்ளோர் பெரும் ஆதரவு கொடுத்து நமது அன்பழகனை வெற்றி பெறச் செய்தார்கள்.

அதே போன்று சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலுக்கும் நமது கழகத்தின் சார்பில் நமது நண்பர்களான அ. பொ. அரசு தி. மணிவண்ணன், ஏ. ஏ. சபால மூர்த்தி ஆகியோரை நிறுத்தினோம்.

இந்த வட்டத்திலுள்ள மக்கள் அந்த மூன்று நண்பர்களுக்கும் பெறவாரியாக வாக்களித்து வெற்றியுறச் செய்தார்கள்.

சிந்தாதிரிப்பேட்டை நகரமன்றத்திற்கும் மூன்று இடங்கள் நமக்குக் கொடுத்தது.

சிந்தாதிரிப்பேட்டை நமது கழகத்திற்குத் தேடிக் கொடுத்த பெருமைக்கு—கழக வளர்ச்சிக்கு கொடுத்து வந்த ஆதரவுக்கு கழகம் சிந்தாதிரிப் பேட்டைக்கு முதன் முதல் பெருமையைத் தேடிக் கொடுத்தது!

கழகத்திற்கு பெருமையும். புகழும் தேடித் தந்தது சிந்தாதிரிப் பேட்டை அதற்குப் பதிலாக கழகம் சிந்தாதிரிப்பேட்டைக்கு புகழும், பெருமையும் கொடுத்தது!

சிந்தாதிரிப்பேட்டை செய்த உதவிக்கு கழகம் உடனே நன்றி தெரிவித்து விட்டது. அதாவது கழகம் முதன் முதலாக சென்னை நகருக்கு தனது மேயரைத் தேர்ந்தெடுத்த போது சிந்தாதிரிப் பேட்டையைச் சேர்ந்த நமது அரசுக்குத் தான் அந்தப் பெருமையை யளித்தது.

இப்போது கழகத்திற்கும், சிந்தாதிரிப் பேட்டைக்கும் உள்ள கணக்கு தீர்ந்த விட்டது. இனி புதுக் கணக்குத் தான் போட வேண்டும். புதுக் கணக்குப் போடுவது என்பது 1962-ம் தேர்தலைத் தான் குறிக்கிறேன். அந்தத் தேர்தலில் நமது கழகம் வெற்றி பெறும் படி செய்வது தான் புதுக் கணக்கு போடுவது.

நான் எழுந்தவுடன் பல பகுதிகளிலிருந்து உண்டியல் குலுக்கிக் காண்பித்தார்கள். அதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன், ஆனால் அப்படி காட்டிய உண்டியல்கள் போதாது. மிகவும் குறைந்து காணப் பட்டது.

அவர்கள் குலுக்கிக் காட்டியது எப்படி இருந்தது என்றால் 'அண்ணா உங்கள் கட்டளைப்படி உண்டியல் வைத்து விட்டோம்" என்று கூறுவது போன்று இருந்தது.

இந்த உண்டியல் வைப்பதானது நமது பலத்தை அரசினருக்குக் காட்டும் ஒரு அறிகுறி நமது கழகத்திற்கு மக்களிடம் இருக்கும் செல்வாக்கை எடுத்து காட்டும் ஒரு ஆயுதமேயாகும்!

இந்த உண்டியல் சத்தம் டாங்க்குப் படைகள் வரும் சத்தத்தைக் காட்டுவது போலாகும். ஒரு நாட்டுப் படைகள் எதிரிகளின் கோட்டை கொத்தளங்களைப் பிடிப்பதற்கு முன் சில வேவு காரர்கள் கோட்டைக்குள் புகுந்து அந்தக் கோட்டைக்குள் என்னென்ன இருக்கிறது. எதெது எங்கெங்கே இருக்கிறது என்பதை வேவு பார்ப்பவர்கள் அது போன்று தான் இன்று சட்ட மன்றத்திற்குச் சென்றுள்ள நாங்கள் வேவு பார்த்து வருகிறோம். அடுத்து கோட்டைக்குள் புகப்போகும் நமது படைகள் வரும் போது முன்னால் வரும் டாங்க் படைகளின் சத்தமே நீங்கள் குலுக்கிய உண்டியலின் சத்தம்!

உண்டியல் குலுக்கிய சத்தம் குறைந்த உண்டியல்கள் குலுக்கியது போன்றிருந்தது. கூட்டத்திற்கு வருபவர்களனைவரும் உண்டியல் கொண்டு வர வேண்டும். எல்லோரும் குலுக்க வேண்டும் அந்த சத்தம் சென்னை அமைச்சர்களுக்குக் கேட்க வேண்டும்.

அமைச்சர்கள் சென்னையிலிருந்தால் "இது என்ன சத்தம்" என்று கேட்டால் இது முன்னேற்றக் கழகத்துக் கூட்டத்தில் அடுத்த தேர்தலுக்கு நிதிச் சேர்க்கும் உண்டியலைக் குலுக்குகிறார்கள்" என்று சொல்ல வேண்டும். அப்போது தான் அமைச்சர்களுக்கு நமது உணர்ச்சி, பலம் யாவும் தெரியும்,

காங்கிரசிற்கு மக்கள் செல்வாக்கு—மக்கள் ஆதரவு இல்லையென்றாலும் பணபலம் இருக்கிறது. அந்த பணபலத்தைக் கொண்டு நம்மை இந்தத் தேர்தலில் தோற்கடித்து நமது செல்வாக்கை அழித்து விடலாம் நமது கழகத்தையே ஒழித்து விடலாம் என்று காங்கிரஸ் நினைக்கிறது!

காங்கிரஸ் இந்தத் தேர்தலில் ஏராளமான பணத்தைச் செலவிடப் போகிறது! அதற்கான பல திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறது! நீங்கள் கொடுக்கும் இந்த சிறு தொகைகளைக் கொண்டு உங்களுடைய ஆதரவை ஆர்வத்தைக்கொண்டு அவர்களைத் தோற்கடிக்க வேண்டும்.

உண்டியல் குலுக்கிய போது உண்டான சத்தத்தைப் பார்க்கும் போது கொஞ்சதுட்டு தான் போட்டிருக்கிறீர்கள் என்று தோன்றுகிறது. ஆகவே தினம் தினம் காசுகள் போட்டு உண்டியலில் அதிகப் பணத்தைச் சேருங்கள்! குலுக்கும் போது உண்டாகும் சத்தத்திலிருந்தே தெரிய வேண்டும்! அதிக காசுகள் இருக்கிறதென்று நீங்கள் உண்டியலைக் குலுக்கும் போது கல, கலவென்று சத்தம் கேட்கக் கூடாது!

நேற்று கூட்டத்தில் உண்டியலைக் காட்டி இருந்தால் இன்று சட்ட மன்றத்தில் பேசும் போது அமைச்சர்களிடம் தெரிவித்திருப்பேன்.

உங்களிடம் பணம் கேட்பதால் நீங்களெல்லாம் சக்தி படைத்தவர்களென்ற எண்ணத்தால் அல்ல!

நீங்களெல்லாம் பெரிய பணக்காரர்கள், நீங்களெல்லாம் ஆடம்பரச் செலவு செய்கிறவர்கள் உங்களுக்கு வீட்டு வாடகை வருகிறது வட்டிப் பணம் வருகிறது என்ற எண்ணத்தைக் கொண்டு உங்களிடம் பணம் கேட்கவில்லை!

உங்களை நான் நன்கறிவேன் நீங்களெல்லாம் உழைத்து. உழைத்து உருக்குலைந்தவர்கள் நீங்களும் உங்கள் குடும்பமும் பிழைப்பதற்கே திண்டாடுகிறீர்கள் என்பதையும் அறிவேன், உங்களுக்கு வரும் வருமானம் வாழ்க்கைக்கேபோதுமானதல்ல என்பதும் எனக்குத் தெரியும், உங்கள் பிள்ளை குட்டிகளை வாழ்விப்பதற்கே நீங்கள் தொல்லைப் படுகிறீர்கள் என்பதும் நான் உணர்வேன் 'இவ்வளவும் தெரிந்தும் பின் என் எங்களைப் பணம் கேட்கிறீர்கள் அண்ணா' என்று நீங்கள் கேட்கலாம்,

பின் நான் யாரைக் கேட்பேன். உங்களிடம் தானே நான் பழகுகிறேன். நான் உங்களைத் தானே தினம் சந்திக்கிறேன், உங்களுக்குத் தான் தெரியும் நான் எதற்காகக் கேட்கிறேன் என்று.

பணக்காரர்களோ, ஆலை முதலாளிகளோ, பஸ் முதலாளிகளோ, மிராசுதாரர்களோ நான் கேட்டால் பணம் தருவார்களா? நான் தான் அவர்களிடம் கேட்பேனா? ஆகவே உங்கள் வருமானத்தில் உங்கள் வாழ்க்கைச் செலவிற்குத் தேவைப் படும் பணம் போக கொஞ்சம் சேமித்து, ஆடம்பரச் செலவுகளையும், களியாட்டங்களுக்குச் செலவிடும் பணத்தையும் குறைத்து உண்டியலில் போடுங்கள். உங்களைப்பற்றித் தெரிந்து தான் தினம் ஒருகாசு இரண்டு காசு போடச் சொல்கிறேன்! அப்படி சென்னகத்திலுள்ள தோழர்களெல்லாம் உண்டியல் வைத்து காசு சேர்த்தால் நிச்சயம் காங்கிரசைத் தோற்கடிக்கலாம்! நாம் வெற்றி பெறலாம்!

நாம் வெற்றி பெறுவதன் மூலம் நம்முடைய இழந்த நாட்டை மீண்டும் பெற வழி ஏற்படும்.

சிலகுடும்பங்களில் தங்களுக்கு வருவாய் குறைவாக இருந்தாலும் எப்படியாவது நாலணா எட்டணா. ஒரு ரூபாயாக சேர்த்து வைத்து தங்கள் குடும்பங்களில் நடைபெற வேண்டிய நல்ல காரியங்களுக்குச் செலவழிப்பார்கள்!

ஒரு ஆப்பம் சுட்டு ஏழை கிழவி ஒருவர் விற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள் அந்த அம்மாளுக்கு ஒரே ஒரு மகன் இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அந்த அம்மாளுக்கு அந்த மகனைப் பார்க்கும் போதெல்லாம் வருத்த முண்டாகிறது.

பையனுக்கு வயதாகி வருவதை உணர்கிறார்கள். மகனுக்குக் காலா காலத்தில் கல்யாணம் செய்ய வேண்டுமே என்று ஏங்குகிறார்கள். கையில் பணமில்லையே. அதற்காக என்ன செய்வதென்று நினைத்து, நினைத்து மனவேதனை அடைகிறார்கள். பின் ஆப்பம் சுட்டு வியாபாரம் செய்துவரும் வருவாயிலிருந்து குடும்பத்திற்குச் செலவாகும் பணம் போக கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து வைத்ததில் ஐம்பது ரூபாய் இருப்பதை காண்கிறார்கள் அந்த அம்மையார் மகிழ்கிறார்கள். பக்கத்திலிருப்பவர்களுக்குக் காட்டுகிறார்கள் அவர்கள் ஏது. இந்தப் பணம் என்ன செய்யப் போகிறாய் என்று அவர்கள் கேட்கிறார்கள். அதற்குப் பதில் கூறாது அந்த அம்மையார் சிரிக்கிறார்கள். பின்னும் அவர்கள் கேட்கிறார்கள் புடவை எடுக்கப் போகிறாயா என்று இந்த வயதில் எனக்குப் புடவை இல்லை என்று தான் அழுகிறதோ. எங்கள் வீட்டில் அரும்பு மீசை முளைத்த வாலிபன் இருக்கிறானே அவனுக்கு காலா காலத்தில் சய்வதைச்செய்ய வேண்டுமென்று ஒரு அணா இரண்டணாவாக சேர்த்து வைத்த பணம் இது என்று அந்த அம்மையார் மகன் மீதுள்ள பற்றாலும், பாசத்தாலும் கூறுகிறார்கள்!

அப்படி தான் நமக்கு நமது நாட்டின் மீது பாசமும் பற்றும் ஏற்பட வேண்டும், நமது நாடு விடுதலை ஆவதற்கான பணிக்கு நம்மாலான காசுகளைச் சேமித்து உண்டியலில் போட்டு கொடுக்க வேண்டும்.

நமது அன்பழகன் அவர்கள் பேசும் போது கூறினார் 'நாங்கள் பதினைந்துபேர்கள் இருக்கிறோம் அடுத்த தேர்தலில் நாங்கள் சட்டமன்றத்தைக் கைப்பற்றுவோம்! என்று நான் அப்படி வீராப்பு பேச விரும்பவில்லை.

இப்போது நாம் பதினைந்து பேர்கள் இருக்கிறோம், அடுத்த தேர்தல் ஐம்பது. அல்லது அறுபது பேரை அனுப்புங்கள்! அதை வைத்தே டில்லியைச் மிரளச் செய்கிறேன். ஐந்தாண்டுகளில் மக்களின் நன்மைக்கான நல்ல காரியங்களைச் செய்து காட்டுகிறேன். நாம்

(8ம் பக்கம் பார்க்க)

தேர்தல்புரி யாத்திரை

பி.எஸ்.இளங்கோ

1

பாரிவள்ளல் வாழ்க!

"வாப்பா கந்தா! சௌக்கிய மெல்லாம் எப்படி?"

"உங்க புண்ணியத்திலே சௌக்கியத்திற்கு குறைச்சல் இல்லை எஜமான்!"

"என் புண்ணியம் என்னப்பா! எல்லாம் ஆண்டவனுடைய அருள்!"

"எனக்குப் படியளக்கிற ஆண்டவன் நீங்கள் தானே எஜமான்!"

"அப்படி யெல்லாம் ஒண்ணும் இல்லப்பா! நீ வேலை செய்ற, நான் கூலிக் கொடுக்கிறேன்—அவ்வளவு தான்!"

"உங்களைப் போன்ற எஜமான் எனக்குக் கிடைக்க வேண்டுமே எஜமான்!

" சரி! அதிருக்கட்டும்—நிலமெல்லாம் எப்படி விளைஞ்சிருக்கு "பத்து கட்டளை" என்ன காணும், அதுக்கு பக்கத்திலே இருக்கிற உடையார் கட்டளைக்கு என்ன புள்ளி போட்டாய்! கொல்லைச் சாவடி நிலம் எத்தனை மேனி காணும்! ஐயனுர் கோயிலடி ஒரு அஞ்சுமேனியாவது காணுமா?" என்று அடிக்கிக் கொண்டே போனுர் தனசேகரம் பிள்ளை!

" நீங்க நினைக்கிற மாதிரி ஒண்ணுமில்லிங்க! இந்த வருசம் எல்லாம் இருபது மேனி காணுங்க!" என்றுன் கந்தப்பன்!

" கந்தப்பா! நீ ரொம்ப கை ராசி காரனடா! நீ மண்ணைத் தொட்டாலும் அது பொன்னுகவே மாறும்!" தனசேகரம் பிள்ளை புகழ்மாலை சூட்டினுர்!

" என்ன எஜமான் சொல்றீங்க!"

" நீ இரவு, பகல் என்று பார்க்காவிட்டால் இப்படி நிலமெல்லாம் விளையுமா? எல்லாம் உன் உழைப்புதான் காரணம்!"

" எல்லாம் அவன் செயல் எஜமான்!"

" அவன் செயலாவது, இவன் செயலாவது, எல்லாம் உன் செயல் தான்!

" எல்லாம் உங்கள் செயல் தான் எஜமான்! பணம் உங்க பணம், நிலம் உங்க நிலம்!இதிலே என் செயல் என்ன எஜமான்!"

" சொந்தமாவது, கிந்தமாவது! இன்னிக்கு இருப்பாரை நாளைக்கு காணும்! இதில் என்ன சொந்தம் வேண்டி இருக்கிறது!"

" அதுவும் வாஸ்தவம் தான் எஜமான்!"

" மனிதனுக்கு பணம், காசு பெரிதல்லடா! பேரும், புகழும் தான் வேணும்! நான் செத்தா இந்த பணமும், நிலமும் என் கூடவா வரும்!"

" உண்மை தான் எஜமான்!"

" இந்த வயசிலே எனக்கு ஏண்டா இந்த தொல்லை யெல்லாம்!"

" உங்களுக்கு என்ன எஜமான் தொல்லை! எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ள நான் இருக்கிறேன்!" கந்தப்பன் கடமை உணர்ச்சியோடு பேசினுன்!

" கந்தப்பா! எனக்கு ஒரு யோசனை தோணுது அதுபடி செய்யலாமா சொல்லு!

" என்ன எஜமான்?"

" எனக்கு ஏண்டா இத்தனை வேலி நிலம்?"

" ஏன் எஜமான்? என்ன செய்யப் போறீங்க! கோயில், கொளத்திற்கு...?"

"கோயில்கொளத்திற்கு எழுதி வைச்சு என்னடா புண்ணியம்?"

"நம்மபள்ளி கூடத்திற்கு எழுதி வைக்க போறீங்களா?"

" ஆமாண்டா கந்தா, ஆமாம்! நம்ம பள்ளிக் கூடத்திற்கு ஒரு பத்து வேலியையும், உனக்கு ஒரு அஞ்சுவேலி நிலத்தையும் எழுதி வைக்கலாம் என்று யோசனை செய்திருக்கிறேன்!"

" எனக்கு ஏன் எஜமான்?"

" பரவாயில்லையடா! உன் பாட்டன் காலத்திலிருந்து, பரம்பரைபரம்பரையாக வேலைசெய்து வரும் ஒரு குடும்பத்திற்கு இந்த உதவி கூட செய்யக் கூடாதா? உன் பாட்டன் உழைத்த உழைப்பு, அதற்குப் பின்பு உன் தந்தை சிந்திய ரத்தம், அதற்கு பின்பு, நீ கொட்டிய வியர்வை எல்லாம் சேர்ந்ததுதான் இந்த செல்வம்!

" எஜமான்! உங்களைப்போல் ஒரு உத்தமரை இதுவரை கண்டதுமில்லை, கேட்டதுமில்லை எஜமான்!"

"ஏண்டா இல்லை! உலகத்தில் எத்தனையோ பேர்கள் இருந்திருக்கள்! பாரி என்ெருரு வள்ளல் இருந்தானே தெரியுமாடா உனக்கு?"

"இல்லை, எஜமான்—அந்த வள்ளலைப் பார்த்ததில்லை—இப்போது தான் பார்க்கிறேன்!"

"ஏய்! அந்தத் குதி எனக்கு இல்லையடா!"

"இல்லை எஜமான், நீங்கள் தான் அந்த பாரி! நீங்கள் தான் அந்த பாரி!"

ஜமீனெல்லாம் ஒழிந்த பின்பும் தனேசகரம்பிள்ளையை, எல்லோருமே ஜமீந்தார் என்று தான் அழைத்து வந்தார்கள்! அதுவும் ஒரு வகையில் பொருத்தமாகவே இருந்து வந்தது! ஜமீன் பட்டம் ஒழிந்ததே தவிர அவருடைய செல்வம், செல்வாக்கு, அந்தஸ்து எல்லாம் அப்படியே தான் இருந்தன! ஜமீன் பட்டம் ஒழிந்து அவருக்குமிராசு பட்டம் கிடைத்ததால் ஏதும் நஷ்டமுமில்லை!

ஆத்தூர் ஜமீந்தார்—இல்லை, இல்லை—மிராசுதார் தனசேகரம் பிள்ளைக்கு நஞ்சை, புஞ்சை அடங்கலாக 50 வேலி அயனுக உண்டு! இதைத்தவிர தந்தை தர்மலிங்கம் பிள்ளை எண்ணி வைத்துப் பூட்டி, சுவற்றில் மாட்டிவிட்டுப் போன இரும்புப் பெட்டிச் சாவியை இவர் இன்னும் தொட்டுக்கூட பார்த்ததில்லை!

வட்டிப் பணத்தில் தான் மகளை படிக்க வைத்து டாக்டராக்கினுர்! அந்தப் பணத்தில்தான் அவர் தேர்தலில் நின்று பல தடவை மனம் நொந்தும் போனுர்!

தனசேகரம் பிள்ளை குடும்பம் என்றுலே உலகமே அறியும்! அந்தக் குடும்பத்தைப் பற்றி ஊரே கதை. கதையாகச் சொல்லும்! "தந்தை எச்சி கையால் காக்காய்களை ஓட்டு வாரம், இவர், கையை சுத்தமாக கழுவிக் கொண்டு தான் ஓட்டுவாரரம்!

அப்படிப்பட்ட தனசேகரம் பிள்ளையா இப்படி கொடை வள்ளலாக மாறினுர்! ஆமாம், அதிசயம், ஆச்சரியம்! கந்தப்பனுல் இதை நம்பவே முடியவில்லை! அவன் தலை சுற்ற ஆரம்பித்தது!

"கந்தா! என்ன யோசிக்கிருய்!

"ஒன்றுமில்லை எஜமான்!"

"இந்தா! இந்த இரண்டாயிரத்திற்கும் ஸ்டாம்பு வாங்கிக் கொண்டு வா! நாளைக்கே உனக்கு சாசனம் செய்து கொடுத்து விடுகிறேன்" தனசேகரம்பிள்ளையின் கைகளா இந்த இரண்டாயிரத்தை நீட்டிற்று! ஆமாம், ஆமாம்! இது மட்டுமல்ல இன்னும் எத்தனை எத்தனையோ பொருள்களை வாரி, வாரி வழங்கப் போவதை உலகம் காணத் தான் போகிறது!

கந்தப்பனுடைய உள்ளம் ஆகாய விமானத்தில் ஏறிக் கொண்டு உலக சஞ்சாரம் செய்ய ஆரம்பித்தது!

2

வண்ண ஜாலம்

"ஏண்டி சாந்தா! யாரடி அவன்?"

"எவனையடி கேட்கிருய்?"

" அதோ பாரடி! அந்த ஆந்தையைத் தான் கேட்கிறேன்!"

" முத்துசாமி ஐயராக இருக்கும்! தெரு விளக்கிலேயே படித்து ஜட்ஜ் வேலை பார்க்கலெ—அந்த முத்துசாமி ஐயரடி—அந்த முத்துசாமி ஐயர்!

" இல்லையடி அவர் பேரனுக இருக்கும்!"

" ஏண்டி! பேரனு? பேத்தியா?"

" மூஞ்சியை பாத்தா பேத்தியைப் போல் தாண்டி இருக்கு!"

" ஏண்டி பானு! ஏன் இப்படி நம்மளையே முறைச்சு முறைச்சு பார்க்கிருன்!"

" காஞ்சது போலிருக்கு!"

" அப்ப கம்பங் கொல்லையைப் பார்க்குதுன்னு சொல்லு!"

" ஏ, சுசிலா! ருக்கு ஏண்டி வாயைத் திறக்கவே இல்லை"

" ஒரு வேளை வருங்கால புருஷனுக இருக்கும்!"

" சுசிலா! நீ சொன்னது கரைக்ட்!

ஏண்டி, உங்களுக்கு ஒண்ணுமே புரியலேயா? ஒங்க அம்மா, அப்பா இதுக்கா பணம் அனுப்புருங்க!

" ஏண்டி பங்கஜம்! இந்த கணவனுக்கே இவ்வளவு கோபம் வருகிறதே! இன்னும் மன்மதனுக இருந்தால் இந்த ரதிக்கு எப்படி கோபம் வரும்!

"ஏண்டி அருக்கு என்ன? உங்களைவிட அவர் லெட்சணமாகத்தான் இருக்காரு!"

"ஓகோ! அவரா? தாலி கட்டறத்துக்கு முந்தியே அவரு, இவரு! பாத்தியாடி பதிபக்தியை!"

பெண்கள் என்றாலே கண்ணெடுத்தும் பார்க்காமல். காரியத்திலே கண்ணையும், கருத்தையும் செலுத்தி புத்தகமும் கையுமாகக்கிடந்த ராஜனுடைய உள்ளத்தில் இந்த கேலி மொழிகள் ஒருபுது உணர்ச்சியை உண்டாக்கத்தான் செய்தன!

பெண்களுடைய பேச்சுக்கு இவ்வளவு இனிப்பா? நான் மாம்பழத்தைதின்றிருக்கிறேன்—எஜமான் வீட்டில் கூடை கூடையாக் கொட்டிக் கிடக்கும் மல்கோவா பழத்தையும் சாப்பிட்டிருக்கிறேன்! அவைகள் அத்தனையும் இந்த கனி மொழிகளுக்கு ஈடாகுமோ! ராஜனுடைய உள்ளம் புதுப்பாதையில் நடக்கத் தொடங்கிற்று!

"சாந்தா! அவளுடைய முகத்தில் தான் எத்தனை சாந்தி! அஜந்தாவின் அழகு ஓவியங்களைப் பற்றி படித்திருக்கிறேன்! அவைகளை எவன் ஓவியம் என்று குறிப்பிட்டானோ எனக்குப் புரியவில்லை என் அழகு தெய்வம், சாந்தாவின் முகத்தைப் பார்த்தாவது அந்த சிற்பக் கலைஞர்கள் அந்த கற்சிற்பங்களை செதுக்கி இருக்கக் கூடாது? ராஜனுக்கு பைத்தியமே பிடித்து விட்டது!

தினம்,தினம் தனிமையை நாடி வீதி விளக்குகளிலே நின்று படித்துக்கொண்டிருந்த ராஜனுக்கு தனிமை என்றாலே வெறுப்புத் தட்ட ஆரம்பித்துவிட்டது!

புத்தகத்தை மூடினான்! மருத்துவக் கல்லூரி விடுதியை நோக்கி நடக்க ஆரம்பித்தான்!

சிறிது தூரம் நடந்து சென்றதும் எதையோ கண்டு கீழே குனிந்தான்! ஒரு வெள்ளை நிறக் கைக்குட்டையைக்எடுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்! அந்தகைக் குட்டையைப் பற்றி எத்தனையோ கற்பனைகள் அவனுடைய மனதில் தோன்ற ஆரம்பிததன! "இது சாந்தாவினுடைய கைக் குட்டையாக இருக்க வேண்டும்! அப்போ நான் பெரிய அதிர்ஷ்டசாலி தான்!கைக்குட்டையை கொண்டு போய் என் அன்புக் காதலியிடம் கொடுப்பேன்! 'அவள் தேங்க்ஸ்' என்பாள்! நான் "நோமென்ஷன்" என்பேன்! அப்போது என்றென்றுமே சாபல்பமாகி விடும்!" என்று கற்பனை செய்தபடியே நடந்தான் கொஞ்ச தூரம் சென்றதும் கைக்குட்டையைப் பிரித்தான், அதிலே "சாந்தா" என்ற பெயரைக் கண்டான்! அவனுடைய உள்ளம் எப்படி இருக்கும்? அவனுடைய உள்ளம், ஒரே நிமிடத்தில் சாந்தாவைப்பார்த்து விட்டது! கால்கள் மட்டும் நடந்து கொண்டே இருந்தன!

(வளரும்)

ஐயய்யோ!
இது அடுக்காது!
நாடு பொறுக்காது!

———o———

நாடாள வந்த காந்தி பக்தர்கள் அனைவரும் ஏழைக்காக, ஏழையோடு ஏழையாய் வாழ்ந்து நாட்டின் நிலையை உயர்த்துவதாக கூட்டம் தவறாமல் தமபட்டம் அடித்து வருகிறார்கள்! ஆனால் அவர்கள் வாழ்வதோ ஹைதராபாத் நிஜாமையும் தோற்கடிக்கும் விதத்தில் இருக்கிறது! ஹைதராபாத் நிஜாமின் வாழ்க்கை என்றால் எழுத்தால், சொல்லால், பேச்சால் வர்ணித்துக் கூற முடியாது என்பதை எல்லோருமே அறிவார்கள்!

"தப்பு, தப்பு" என்பார்கள் காங்கிரஸ் தியாகிகள்! கீழே நோக்குங்கள்—தலை சுற்றி வீழ்வீர்கள்!

முதலமைச்சர் கனம் காமராஜருக்கு
ஊர் சுற்றி வரச் செலவான தொகை ரூபாய்
7122-92

சிறையில் கலையமேந்தி கூழ்குடித்த பக்தவத்சலத்திற்கு
ஊர் சுற்றி வர படி ரூபாய்
12002-93

கோவைச் சீமான், தவறு, கோவை உழைப்பாளி
சுப்பிரமணியத்திற்கு பிரயாணப் படி ரூபாய்
10797-98

மந்திரி பதவிக்காகக் கட்சி விட்டு கட்சி மாறிய
புது, காந்திக் குல்லாய்க் காரர்
மாணிக்கவேலருக்கு பிரயாணப் படி ரூபாய்
9727-40

அமெரிக்காவில் பாதி நாட்களை கழித்தும்
வெங்கட்ராமனுக்கு ஊர்வலச் செலவு ரூபாய்
2653-74

மந்திரி பதவியின் மூலம் அறிமுகமான கனம் இராமையாவுக்கு
பிரயாணப் படி ரூபாய்
10419-16

மாபெரும் கருத்துப் புரட்சியால் சரித்திரத்தையே மாற்றி அமைத்த
கக்கன்'ஜீ'க்கு பிரயாணப் படி
8139-81

மாஜிவாத்தியாரம்மா-லூர்து அம்மையாருக்கு
9453-91

ஊர் சுற்றி வர இத்தனை ஆயிரம் செலவு என்றால்
இந்த நாடு தாங்குமா? ஐயோ தாங்குமா? தமிழகமே பதில் சொல்லு!

ஒருவர் எவ்வளவு இழிவாகத் தாக்கப்படுகிருரோ அவ்வளவு அதிகம் மக்கள் புகழ் கிடைக்கும் !

(அண்ணு பேச்சு)
(5 பக்கம் தொடர்ச்சி)

செய்யுங் காரியங்களைப் பார்த்து உலகத்திலுள்ள அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

மற்றும் நாம் கேட்கும் திராவிட நாட்டையும் வெகு விரைவில் அடைய முடியும், நம்முடைய மக்களின் உள்ளக் கிடக்கை வடவர் வெகு சுலபத்தில் அறிந்து கொள்ள முடியும்!

நாம் சட்ட மன்றத்திற்குச் செல்வது பதவியில் அமர அல்ல' பதவி ஆசை வைத்தல்ல. பறிபோன நமது நாட்டைப பெறுவதற்கே யாகும்! பறிபோன உரிமையைப் பெறுவதற்கே யாகும்! சட்ட மன்றத்தில் பேசும் நமது குரல்கள் டில்லியின் ஏகாதிபத்தியத்தை நடு, நடுங்கச் செய்யும் அவர்களைக் கண் விழிக்கச் செய்யும்,

நாம் சட்டசபையில் நம்முடைய பதினைந்து பேர்கள போடும் உரிமைக் குரலால் டில்லியிடம் பேசுவதற்கே அஞ்சியிருந்த அமைச்சர்கள் இன்று தட்டிக் கேட்க வேண்டிய தைரியத்திற்கு வந்திருக்கிருர்கள்!

நாம் எதையும் அவசரப்பட்டு ஆத்திரப்பட்டு செய்ய விரும்பவில்லை! நிதானித்து நேர்மையோடு காரியங்களைச் செய்ய விரும்புகிருேம்!

நாம் உடனே கண்ணுடி வீட்டில் போய் குடியிருக்க வேண்டுமென்று ஆசைப்படவில்லை! அப்படிப் போனுல் தெருவில் போகிறவர்கள் நம்மீது பகையுள்ளவர்கள் கல்லை யெறிந்து பாழ்படுத்த நினைப்பார்கள்! நாம் நல்ல கட்டிடத்தைக் கட்டி. மாடியை உயர்த்தி, சுவர்களை பலம் வாய்ந்ததாக அமைத்து சுவற்றைச் சுற்றி கண்ணுடி வைக்க விரும்புகிருேம்! கல்லெறிந்தாலும் கண்ணுடி உடையாது! கல்லெறிபவர்களின் கை தான் வலிக்கும் • அது போன்று தான் நமது கழகத்தையும் வளர்த்துச் செல்ல வேண்டும். ஆகவே அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வகையில் பாடுபடுவதுடன். நமது கொள்கைகளை யாவரும் அறியும வண்ணம் பாடுபட்டு வர வேண்டும்.

நம்மை மாற்ருர் தூற்றுகிருர்கள் என்று நாம் கவலைப்படக் கூடாது தூற்றத் தான் செய்வார்கள்.

நாம் அடைந்திருக்கும் வளர்ச்சி நமக்கு மக்களிடம் இருக்கும் செல்வாக்கு இவைகளைப் பார்க்கும் போது யார் தான் நம்மைத் தூற்ற மாட்டார்கள்.

கடந்த பத்தாண்டுகளில் எந்தக் கட்சியும் அடைய முடியாத வளர்ச்சியை நாம் அடைந்திருக்கிருேம இதை வேண்டுமானுல் பந்தயம் கட்டிக் கூறுவேன்! காங்கிரஸ் கட்சியின் சரித்திரத்தை எடுத்துப் பாருங்கள். மற்ற கட்சிகளின் வரலாற்றையும்பாருங்கள் நாம் இந்தப் பத்தாண்டுகளில் அடைந்த வளர்ச்சியை அடைந்திருக்கிறதா என்று நிரூபிக்கட்டும்!

அதைப் பார்த்து தான் எல்லோரும் நம்மைத தூற்றுகிருர்கள்! தூற்றட்டும் அது பற்றி கவலைப்பட வேண்டாம்!

எனக்கும் பெரியாருக்கும், பிளவு ஏற்பட்டு நான் காஞ்சிவரத்திற்குப்போய் அங்கு இருந்து வந்தேன். அப்போது என்னிடம் பல கட்சிக்காரர்கள் ஓடி வந்தார்கள், என்னை அவர்கள் கட்சிகளில் சேர்க்க பலர் முயற்சிகள் செய்தார்கள்.

நான் காஞ்சிவரத்திலிருக்கும் போது காங்கிரஸ் கட்சியைக் சார்ந்த பெரிய தலைவர் ஒருவர் சென்னையிலிருந்து வந்தார். அவர் எனது நண்பர் நான் அவர் பெயர் சொல்ல விரும்பவில்லை! அது அரசியல் நாகரீகமுமாகாது!

அவர் தனியாக என்னைச் சந்தித்து சிரித்துக் கொண்டே "உனக்கும் பெரியாருக்கும் பிளவாமே" என்று கேட்டார்!

ஆமாம், பிளவு தான் என்றேன் உடனே அவர் கூறினுர். பெரியார் எப்பொழுதும் அப்படித் தான் யாரிடமும் சரியாக நடந்து கொள்ள மாட்டார்" என்று கூறி விட்டு, உடனே தாழ்ந்த குரலில் உன் படிப்பென்ன? அறிவென்ன? திறமையென்ன நீ மட்டும் எங்கள் கட்சியில் சேர்ந்து விட்டால் அடுத்து நீயும் ஒரு மந்திரி யென்ருர்!

நான் அவரிடம் கூறினேன் நான் முதன் முதல தேடிக் கண்டு பிடித்த ஒரே கட்சி சுயமரியாதைக் கட்சி. நான் பார்த்த ஒரே தலைவர் பெரியார் அவர்கள் தான்! இனி நான் எந்தக் கட்சியிலும் சேர வேண்டியதில்லை! எந்தத் தலைவரையும் பின்பற்றவும் மாட்டேன். நான பின்பற்றக் கூடிய ஒரே தலைவர் பெரியார் தான்! அவரிடம் இருந்து விலகுகிறேன் என்ருல் நான் பின்பற்றும் படியான தலைவர்கள் யாருமில்லை!

நான் வேண்டுமானுல் தலைவராக இருக்க முடியுமே தவிர வேருெரு தலைவரின் கீழ் இருக்க மாட்டேன் என்றேன்!

அதே போன்று தான் பல கட்சிக்காரர்கள் என்னிடம் வந்தார்கள்! பல ஆசை வார்த்தைகள் கூறிப்பார்த்தார்கள்!

அதற்குப் பின் நாம் நமது கழகத்தை ஆரம்பித்தோம் அப்போது பல அரசியல் தலைவர்கள் நம்மை கேலியும் கிண்டலும் செய்தார்கள் பெரியாரும் நம்மை கடுமையாக தாக்கினுர். பலர் நம்மைப் பார்த்துச் சொன்னுர்கள் "அம்பிக்கலலே ஆற்றில் பறக்கும் போது இதுகளால் என்ன செய்ய முடியும்" என்று நையாண்டி செய்தார்கள் இவர்கள் எத்தனை நாட்களுக்கு வாழ்வார்கள் என்று சிலரும்,6 மாதம் கூட இவர்கள் ஒன்ருக இருக்க முடியாது என்று சிலரும் இவர்களுக்குள்ளேயே சண்டை வந்து கழுத்தைப் பிடித்துக் கொள்வார்கள் என்று பலரும் எண்ணினுர்கள்! அதை யெல்லாம் மீறியே வளர்ந்து வருகிறது.

நமது கழகத்தில் இருப்பவர்கள் எல்லாம் வாலிபர்கள் அவர்களுக்கு எப்போதும் கோபம் தான் வரும். நான் எப்பொழுதும் பெரியவர்களிடம் பழக மாட்டேன் என்னுடன் வாலிபர்கள் தான் சதா இருப்பார்கள். நமது கூட்டங்களுக்கும் வாலிபர்களும். ஏழைகளுந்தான் வருவார்கள்.

இன்று மேடையில் கூட யார் இருக்கிருர்கள் நமது கபாலியும் மணிவண்ணனுந்தான் உட்கார்ந்திருக்கிருர்கள் !

நமது கூட்டத்தையும் பாருங்கள் யார் வந்திருக்கிருர்கள்! வாலிபர்கள் தான் அதிகம் இருக்கிருர்கள்!

எனக்குப் பல கடிதங்கள் வரும் அதைப் பார்த்தால் எனக்கு சிரிப்பும் வரும். சில சமயங்களில் பயமும் வரும் ஏனெனில் இந்த வாலிபர்களை எப்படி சமாளித்துக் கொண்டு போவது என்று.

எனக்கு வரும் சில கடிதங்களில் கீழ்கண்டவாறு எழுதுவார்கள், அண்ணு! எங்கள் ஊர் கூட்டத்திற்கு வரும்படி பல வருடங்களாக எழுதியும் தாங்கள் தேதி கொடுக்கவில்லை, இந்ததடவை எங்கள் கடிதப்படி எங்கள் ஊருக்கு வரவில்லையானுல் சமூகத்தைக் கலைத்து விடுவோம்" என்று எழுதியிருக்கும் பல இயக்கங்களில் இயக்கத்திலுள்ளவர்களைத் தலைவர்கள் மிறட்டுவார்கள் ஆனுல் நம் கழகத்தில் தலைவர்களைத் தான் கழகத்திலுள்ளவர்கள் மிறட்டுகிருர்கள். இது நம் இயக்கத்தைத் தவிர வேறு எந்த இயக்கத்திலும் காணமுடியாது

நமது கழகம் பிரிந்த சமயம் நானும் நமது சம்பத்தும் "எலிபன்ஸ்டோன்" தியேட்டரில் நடைபெற்ற ஒருபடத்தைப் பார்க்கப் போனேம் அந்தப் படத்தின் பெயர் "டிஸ்ரேலி" என்பதாகும் அதில் வரும் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன் அதில் பல நண்பர்கள் கூடி, ஒரு நண்பரை மந்திரி பதவி ஏற்றுக் கொள்ளும்படி கூறுகிருர்கள் அந்த நண்பர் அந்தப் பதவியை ஏற்று சமாளிக்க முடியாது என்கிருர் இந்த நேரம் சம்பத்தைப் பார்த்தேன் பார்த்ததும் சம்பத் நான் பார்த்ததின் கருத்தைத் தெரிந்து கொண்டான். "தம்பி நாம் பெரியாரை விட்டு விலகுகிருேமே தனியாகப் போய் கட்சியை வைத்து நான் சமாளிக்க முடியுமா என்று அஞ்சுகிறேன்" என்றேன் அதற்கு சம்பத சாமர்த்தியமாக பதில் சொன்னுன் "நாம்" சமாளிப்போம் என்று அருமையான கருத்தை அன்போடு கூறினுன்

அப்போதும் அஞ்சினேன் சுயமரியாதை இயக்கத்திலிருந்த தோழர்கள் ராமநாதன், ஜீவானந்தம், அழகிரிசாமி, விஸ்வநாதம் முதலியவர்கள் விலகினுர்கள் அவர்களாலேயே ஒன்றும்செய்ய முடிய வில்லை

நாமோ பெரியார் சொற்படி "ஓட்டை. உடைசல். ஈயம், பித்தளை செம்பு பாத்திரம் நாம் என்ன செய்ய முடியும் என்று ஏங்கினேன்! பெரியாரை விட்டு விலகியவர்களை யெல்லாம் மனக் கண் முன் வைத்துப் பார்த்தேன்! அவர்களை யெல்லாம் வைத்து ஒரு மாநாடே கூட்டலாம் போலிருக்கிறதே என்று எண்ணினேன். ஆனுல் நாம் வளர்த்த பாசத்தால், கட்டுப் பாட்டால் வளர்ந்திருக்கிருேம்! இதைத் கண்டு நாம் பெருமைப் படுகிருேம் மகிழ்ச்சியடைகிருேம்!

ஆனுல் இன்று அரசியல் உலகில் நம்மை அழித்திட காங்கிரஸ் பலமான திட்டங்கள் போட்டு வருகிறது. பல பணக்காரர்களின் ஆதரவைத் திரட்டி வருகிறது. அதிலிருந்து நாம் தப்புவிக்க வேண்டும். ஆனுல் நாம் நமது கட்டுப்பாட்டாலும் கண்ணியத்தாலும் கடமை உணர்ச்சியாலும், நமக்கு இயற்கையாக உள்ள "பாசத்தாலும் அவர்கள் எண்ணத்தை தான் தோற்கடிக்க வேண்டும்

வரும் தேர்தல் தான் நமக்கு முக்கியமானதாகும் அதில்தான் நமது கழகத்தின் வலிவை நமது எதிரிகளுக்குக் காட்டவேண்டும் நாம் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்ருல் நமது இலட்சியமும் எண்ணங்களும் நாம் சொண்டிருக்கும் நாட்டு விடுதலை உணர்சியும் சுலபமாக நிறை வேற்ற முடியும்

நாம் இந்தத் தேர்தலில் தோற்ருல் அரசியலில் நமக்கு 25 வருடங்களுக்கு இடம் கிடைக்காது!

ஆகவே நீங்களெல்லாம் இன்றிலிருந்தே பணியாற்றுங்கள் உண்டியலில் காசு போடுங்கள் மக்களிடம் இன்றிலிருந்தே இன்றுள்ள ஆட்சியின் நிலையை விளக்குங்கள் அயராது உழையுங்கள்.

இன்று சட்டமன்றத்தில் நாங்கள் 15 பேர்கள் 150 பேர்கள் மத்தியில் பணியாற்றுகிருேம் என்ருல் உங்கள் ஆதரவைக் கொண்டுதான் பணியாற்றுகிருேம் இனியும் உங்கள் ஆதரவைப் பெருக்குங்கள்

ஆகவே எவ்வளவு தூற்றினுலும் ஏசினுலும் நமக்கு லாபம் தான்! ஆகவே நீங்களெல்லாம் உண்டியலில் காசு போட்டு நமது தென்னுடு விடுதலை யடைய வழி செய்யுங்கள் !

ஒவ்வொரு கூட்டத்திற்கும் உண்டியல் கொண்டு வந்து காட்டுங்கள் என்று கூறி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்

வணக்கம்

(நெடுஞ்செழியன் பேச்சு)
(9ம் பக்கத் தொடர்ச்சி)

ஓராண்டு நகரமன்றத்தில் நாம் சாதித்ததை பொது மக்கள் உணரச் செய்வோம்!

ருக்கிறதே தவிர இவர் பெரிய அகில உலக அரசியல் மேதை என்பதற்காகவோ, நிர்வாகத் திறமைப் படைத்தவர் என்பதற்காகவோ முதன் மந்திரி பதவி கொடுக்கப்படவில்லை.

பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தனது தந்திரத்தால் காங்கிரஸ்காரர்களையே ஒழித்திருக்கிறார்,

காங்கிரசில் பல ஆண்டுகள் உழைத்து வந்த நண்பர் சி. பி. சுப்பையா, நண்பர் மா. பொ. சிவஞானம் போன்றவர்களை தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்களாக வரமுடியாதபடி ஒழித்துக் கட்டியிருக்கிறார்.

காங்கிரஸ் கட்சிக்குள்ளாகவே பல பிரிவினைகளை உண்டாக்கி ஒருவருக்கொருவர் சேர விடாது பிரித்து வைத்து அங்கங்கு ஒவ்வொருவரை வைத்து தனது காரியங்களைச் சாதித்து வருகிறார்,

அப்படிப்பட்ட தந்திரம் படைத்த காமராசராலேயே நமது கழகத்தை அழித்து ஒழிக்க முடியவில்லை என்றால் சாதாரணமாக மேடையில் ஆபாசமாக இழிவாகப் பேசிவருபவர்களாலா நம்மை அழித்துவிட முடியும்.

தூத்துக் குடியில் சிதம்பரத்தில புதுவையில் நடைபெற்ற இடைக் காலத் தேர்தல்களில் நாம் தோல்வியுற்றோம். என்று கிண்டல் செய்து பேசுகிறார்கள். நையாண்டி செய்கிறார்கள். நாம் தோற்றோம் அதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறோம். ஒப்புக் கொள்கிறோம். எதனால் தோற்றோம். மக்கள் ஆதரவில்லாததாலா?

தூத்துக்குடியில் முதன் முதலாகப் பொதுத் தேர்தலில் நின்றோம் தோற்றோம். இரண்டாவது இடைத் தேர்தலில் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் நமது கழகம் போட்டியிட்டது, காங்கிரஸ் தனது பல சொண்டமட்டும் எதிர்த்தது, தனக்கிருந்த செல்வாக்கைப பயன் படுத்தி வேலை செய்தது. கம்யூனிஸ்ட் கட்சியும் அங்கு பணியாற்றியது அதனால் காங்கிரஸ பத்தொன்பதாயிரத்துச் சில்லரை ஓட்டுகளும், கம்யூனிஸ்டு பதினெட்டாயிரத்து சில்லரை ஓட்டுகளும் நாம் பத்தாயிரத்திச் சில்லரை ஓட்டுகளும் பெற்றோம், தோல்வி யுற்றோம்.

பின் இரண்டாவது இடைத் தேர்தல் வந்தது அதில் நாமும் கம்யூனிஸ்ட் கட்சியும் கூட்டாகி, நமது கழக அபேட்சகரைத் தேர்தலில் நிறுத்தினோம் கம்யூனிஸ் கட்சி நம்மை ஆதரித்தது.

இதைப் பார்த்தார் காமராசர் இருவரும் ஒன்று சேர்ந்து விட்டதால், காங்கிரசை வெற்றியடைவதற்கு பல தந்திரங்களை, சூழ்ச்சிகளை, பணபலத்தை, அதிகார பலத்தை அத்தனையையும் உபயோகப்படுத்தினர். அமைச்சர்களையெல்லாம் அனுப்பினர். தானும் போய் உட்கார்ந்தார் அதிகாரிகளோடு பவனிவந்தார், முன்பு பெற்றதைவிட அதிக ஓட்டுகளை வாங்கினர் அவர் எதிர்பார்த்ததைவிட இரண்டு மடங்கு அதிக ஓட்டுகளை வாங்கினர். எப்படி வாங்கினர். நேர்மையற்ற முறையில், நீதியற்ற வழியில், அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்து தமது அபேட்சகரை வெற்றியுறச் செய்தார். இதுதான் ஜனநாயகமா?

நாம் தேர்தலில் பணி செய்கிறோம். நமது அண்ணா அவர்களோ, அன்பழகனோ, கருணாநிதியோ, மதியழகனோ தேர்தல் பிரச்சாரத்திற்குச் செல்கிறார்களென்றால் கட்சிக்காரர்களென்ற முறையிலேயே செல்கிறார்கள். ஆனால் காமராசரோ, கக்கனோ, பக்தவச்சலமோ. சுப்ரமணியமோ காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் என்று வரவில்லையே. மந்திரிகள் என்ற முறையில் தானே வருகிறார்கள்.

மந்திரிகள் நடுநிலைமை வகிக்க வேண்டியவர்கள் கட்சி பாகுபாடற்றவர்கள் எதையும் ஜனநாயக முறையில் செய்ய வேண்டியவர்கள், அப்படிப்பட்டவர்கள் ஊர் ஊராகத் தேர்தல் பிரச்சாரம் செய்து கட்சியை வெற்றி பெறச் செய்வது சரிதானா காங்கிரசைக்காக்க அதிகாரத்தைப் பயன்படுத்துவது நீதியா இதைத் தான் நாம் பொதுமக்களிடம் கேட்க வேண்டும்.

நமது நகரில் ஏழைகள் குடியிருக்க வசதியின்றி வாடுகிறார்கள், நடை பாதைகளிலும், ரோட்டோரங்களிலும் வாழ்கிறார்கள் சிறு, சிறு குடிசைகளில் வசதியற்ற முறையில் வாழ்கிறார்கள் இதை அரசினர் எந்த வித கவலையும் எடுத்துக் கொள்ளவில்லை!

சேரி என்ற பெயரால் 376 சேரிகள் இருக்கிறது. அந்த சேரிகளில் சின்னஞ்சிறு குடிசைகளை அமைத்து நிமிர்ந்து போக முடியாத தாழ்வான நிலையில் அமைத்து அதில் எந்த வித வசதிகளுமின்றி வாழ்கிறார். கள் சின்னஞ்சிறு இடத்தில் பல குடிசைகளை அமைத்து அங்கு வாழ்வோர் அவதியுறும் நிலமையை உண்டாக்கி வருகிறார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களின்—சேரி வாழ்வோரின் நலனுக்காகப் பாடுபட்டு வருகிறோம், அவர்களின் வசதிக்காக காங்கிரஸ் சர்க்கார் பல உதவிகளைச் செய்திருக்கிறது என்று பறைசாற்றி வரும் நமது அரசினர் தாங்கள் ஆட்சிக்கு வந்த பின் இந்த சேரிகளை ஒழித்து அங்குள்ளோர் நல்ல முறையில் வாழ என்ன செய்தார்கள்! நாய்களும், பன்றிகளும் கூட நுழைய முடியாத நிலையில் குடிசைகள் இருக்கின்றன. இதைப் போக்க என்ன வழிவகை செய்தார்கள்?

மாம்பலம், மைலாப்பூர். ஷெணய் நகர் போன்ற இடங்களில் கட்டிடங்கள் கட்டிக் கொடுத்து மற்ற மக்களுக்கு வசதிகள் செய்வோர் சேரிகளில் நல்ல கட்டிடங்களைக் கட்டி அதிலுள்ளோர் நல்ல வசதிகளுடன் வாழும் படி ஏன் செய்யக் கூடாது.

நகரில் இடவசதிகள் சரியாக இல்லையென்றால் இருக்கின்ற இடத்திலேயே பல மாடிகள் உயரமாகக்கட்டி அதில் ஏன் வசிக்கச் செய்யக் கூடாது. சிக்கன முறையில் நல்ல வீடுகள் அமைத்து அவர்களை வசிக்கச் செய்யவேண்டும். அவர்களை வெளியிடங்களில் போகும்படி வற்புறுத்தக் கூடாது, அவர்கள் பணிபுரியும் இடங்களுக்கு அருகிலேயே இருக்க வசதிகள் செய்ய வேண்டும் இதையெல்லாம் நமது தோழர்கள் நகரமன்றத்தின் மூலம் செய்ய வேண்டும் சர்க்கார் செய்வதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும்.

நமது நண்பர்கள் கூறினார்கள் நகர மன்றத்தில் செயயும் பணிகளைப் பற்றி தப்பான முறையில் பிரச்சாரம் செய்தும், இழித்தும் பழித்தும் மாற்றார் பேசி வருவதாகக் கூறினார்கள்.

நான் பல கூட்டங்களில் கூறுவதையே தான் இங்கும் கூறுகிறேன், அவர்கள் தூற்றுவதை அவ்வளவு பெரிதாக நினைக்கக் கூடாது. தூற்றுபவர்கள் தூற்றிக் கொள்ளட்டும்.

நமது கழகம் என்று தோன்றிற்றோ, நாம் தனியாக என்று பிரிந்தோமோ அன்றிருந்தே நம்மைத் தாக்குகிறார்கள். பலர் மூளையிலேயே கிள்ளியெறிய வேண்டுமென்று நினைத்தார்கள். தானாகவே நாம் அழிந்தவிடுவோம் என்று பலர் நினைத்தார்கள்! கருகிச் சாம்பலாகி விடுவோமென்று பலர் நினைத்தார்கள். ஆனால் அவர்கள் நினைத்ததை விட மிக உறுதியாக வேறூன்றி வளர்ந்திருக்கிறோம்—வளர்ந்து வருகிறோம்! எத்தனையோ பேர்கள் நம்மை ஒழிக்க அழிக்க நினைத்தார்கள். அவர்கள் அழிந்தார்கள். ஒழிந்தார்கள் காங்கிரஸ் கட்சியிலிருப்பவர்கள் நம்மைத்தூற்றி இழித்துப் பேசுகிறார்களென்றால் அவர்கள் அழிகிறார்கள். வீழ்கிறார்கள் அந்த வெறியினால் நம்மைத் தாக்குகிறார்கள். நன்றாகத் தாக்கட்டும்! அதனால் அவர்கள் நீடூழி வாழட்டும். அவர்கள் பல்லாண்டு வாழட்டும் ஆனால் நாம் மட்டும் திருப்பித் தாக்கக் கூடாது!

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் சஞ்சீவி ரெட்டி அவர்கள் சமீபத்தில் நம்மைப் பற்றிப் பேசும் போது, கொசுவை நசுக்குவது போல் நசுக்கி விடுவதாகக் கூறினாராம்!

அவர் அப்படிப் பேசியதற்காக மகிழ்ச்சி யடைகிறோம்! அப்படிப் பேசிய சஞ்சீவிரெட்டியார் நீடுழி வாழ ஆசைப்படுகிறோம். அவர் நெடிது வாழ விரும்புகிறோம்!

பண்டித மதன் மோகன் மாளவியா, லாலாலஜபதிராய், சௌக்கத்தலி, மகமதலி, சி. ஆர். தாஸ், சுபாஸ் சந்திரபோஸ், சரத் சந்திரபோஸ், பாலகங்காதர திலகர், சென்குப்தா, டாக்டர் அன்சாரி காந்தியார் போன்ற பெரும் தலைவர்கள் வளர்த்த காங்கிரஸ், அவர்கள் சொந்த தியாகத்தால்—உழைப்பால் வளர்ந்தகாங்கிரஸ் இந்திய துணைக் கண்டத்தில் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் காங்கிரஸ் பலசெல்வாக்கும், பல நாட்டாருடையபுகழ்ச்சிகளும் பாராட்டுக்கும் இலக்காகி இருக்கும் காங்கிரஸ் இன்று மக்களின் செல்வாக்கை இழந்து வருகிறது ஏன் என்று எண்ணிப் பார்க்க வேண்டும் அதை விட்டுவிட்டு காங்கிரசின் தலைவர் கூறுகிறார், நம்மை கொசு போல் நசுக்குவாராம் நசுக்கட்டும். அவர் எண்ணம் ஈடேறட்டும்! 1949க்கு முன் நாம் எப்படி இருந்தோம்? அப்போது நமது நிலை என்ன? இன்றைய நமது நிலை என்ன? நாம் இப்போது எப்படி இருக்கிறோம். இன்று நாம் இருக்கும் நிலைக்கு வளர்ச்சிக்கு—மக்களிடம் நாம் பெற்றிருக்கும் அன்பிற்குக் காரணம் என்ன இதைத சற்று நாம் கவனிக்க வேண்டும் அதை விட்டு மாற்றார் தூற்றுகிறார்களே! இழித்துப் பேசுகிறார்களே என்றால் இழித்துப்பேசாது வேறென்ன செய்வார்கள்?

மாற்றார் நம்மைப்பற்றி என்ன கூறுகிறார்களென்று நாம் சிந்திப்பதை விட—மாற்றார் என்ன பேசுகிறார்கள் என்று எண்ணுவதை விடமக்கள் என்ன எண்ணுகிறார்கள் என்று நாம் பார்க்க வேண்டும்.

மக்கள் மன்றம் தான் நீதிபதிகள். மக்கள் கொடுக்கும் தீர்ப்பு தான் நமக்குத்தேவை நாம் வாதி—மாற்றார் பிரவாதிகள்; பிரவாதிகள் நம்மைப்பற்றி என்ன கூறுகிறார்கள் என்று ஏன் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும், அவர்கள் நாம் செய்வது, நமது பணிகள் சரியென்று கூறுவார்களா? ஒருக்காலும் கூற மாட்டார்கள். ஆகவே மக்கள் நம்மைப்பற்றி நல்ல முறையில் நினைக்கும் எண்ணம் நடந்து கொள்ள வேண்டும்

நாம் இன்று புகாத இடங்களிலெல்லாம் புகுந்து விட்டோம், நமது கருத்துக்கள் நுழையாத இடங்களிலெல்லாம் நுழைந்து விட்டது. நமது எண்ணங்கள் மக்கள் மனதிளெல்லாம் பதிந்து விட்டது. ஆனாலும் இன்னும் நமது கருத்துக்கள் பதிய வேண்டிய நுழையவேண்டிய இடங்கள் ஏராளமாக இருக்கிறது. நம்மைப் பற்றி பலர் பலவிதமாக மக்களிடம் கூறிவருகிறார்கள் நம்மை கடவள் விரோதி என்று கூறி மக்களை மயக்கப் பார்க்கிறார்கள் அதை மாற்ற நாம் முயற்சி செய்யவேண்டும்.

இப்போது வளர்ந்திருப்பதை விட நாம் இன்னும் அதிகமாக வளர வேண்டும். நாம் வளர வேண்டியவர்கள். வீழ வேண்டியவர்கள் நம்மைப பற்றி தூற்றிப் பேசுவார்கள்! நாம் அதைப் பற்றி சிந்தனையே செய்யக் கூடாது!

(10ம் பக்கம் பார்க்க)

பிரயாணப் படியின் மூலம் ஏராளமான பணத்தை ஏப்பமிடுகின்றனர் "ஏழைப்பங்காளர்கள்"!

(நெடுஞ்செழியன் பேச்சு)
(9ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் கொஞ்ச நஞ்சம் மக்களிடம் அன்பு பெற்றிருப்பதை கெடுப்பதற்கு காங்கிரஸ் விரைவாக அழிவதற்கு — வீழ்வதற்கு வழிவகை செய்ய அழகேசனார் தலைவராக வந்திருக்கிறாரே நாம் ஏன் பயப்பட வேண்டும்!

காங்கிரசை வீழ்ச்சியடையச் செய்ய நாம் வளர்வது மட்டுமல்ல. திரு. ஆச்சாரியாரே காங்கிரசை அழிக்க வேலை செய்து வருகிறார். நம் முயற்சியால் காங்கிரஸ் அழிவதைவிட காங்கிரசை வளர்த்து காங்கிரசுக்காக அரும்பாடுபட்ட ஆச்சாரியாரே அழிக்க முற்பட்டு விட்டார்.

அதே ஆச்சாரியார் அவர் முதன் மந்திரியாக இருந்த காலத்தில், நம்மை மூட்டைப் பூச்சு நசுக்குவது போன்று நசுக்கி விடுவதாக கர்ஜனை செய்தார்.

நமது "சாப்ட்டரை" குளோஸ் செய்து விடுவதாகவும், நம்மை இருக்குமிடம் தெரியாது அழித்து விடுவதாகவும் ஆணவமாகவும், அடுக்குத் தனமாகவும் பேசினார். அவர் நிலை என்ன வாயிற்று

இந்தியத் தணைக்கண்டத்தில்—ஏன், அகில உலகத்தில் அரசியல் மேதை எனப் புகழப் பட்டவரும், காந்தி சம்மந்தியும், காந்திக்கு அடுத்த படியாக மதிக்கப் பட்டவரும் தென்னாட்டுக் காந்தி என மக்களால் அழைக்கப்பட்டவரும் 1952ல் காங்கிரஸ் வெற்றியடைந்து எதிர்க்கட்சிகள் பலம் பொருந்தியதாக இருக்கிறதெனத் தெரிந்து ஆச்சாரியாரைத் தவிர வேறு யார் மந்திரி பதவி ஏற்றாலும் நிலைக்காது என்று தெரிந்து ஆச்சாரியாரின் வீட்டிற்கு ஓடி, ஓடிச் சென்று கெஞ்சி அவரை அழைத்து மந்திரி பதவியில் காமராசரே உட்கார வைத்தார். ஏன் அகில இந்திய காங்கிரசின் தீர்மானங்களின் நகல்களை எழுதுவதும் ஆச்சாரியார் தான், அது மட்டுமா? காந்தியார் தண்டியில் உப்பு சத்தியாக்கிரகம் செய்கிறார் என்று ஆச்சாரியார் வேதாரண்யத்தில் சத்தியாக்கிரகம் செய்வார் அப்படியெல்லாம் செல்வாக்கு படைத்த ஆச்சாரியார் நம்மை வீழ்த்த முடியவில்லை அழிக்க முடியவில்லை அவர் இப்போது காங்கிரசை அழிக்க அரும்பாடுபடுகிறார். அப்படி இருக்கும்போது காங்கிரஸ்காரர்கள் தூற்றுகிறார்களென்றால் தூற்றட்டும் அதை நாம் பொருட்படுத்தக் கூடாது

நாம் நமது இலட்சியத்தை வளர்க்கும் பணியில் மிக மும்மரமாக இருக்க வேண்டும். அமைச்சர்களுக்கு நம் நாட்டைப் பற்றிய கவலை எதுவுமில்லை நாட்டு மக்களின் வாழ்க்கையை உயர்த்தும் நோக்கம் எதுவுமில்லை

டெல்லியிலுள்ளோர் தென்னாட்டின் லகானைப் பிடித்து வைத்திருக்கிறார்கள் அவர்கள் ஆட்டும் ஆட்டத்திற்கெல்லாம் ஆடும் பொம்மைகளாக நமது அமைச்சர்கள் இருந்து வருகிறார்கள்

காமராசரோ அவரது அமைச்சரவையோ தென்னாட்டின் மீது அக்கறை கொள்ளாது டெல்லி சர்க்காரின் அடிமைகளாக இருந்து வருகிறார்கள்

தென்னகத்தில் தொழிற்சாலைகளமைக்கவோ, தென்னகத்தில் தொழில்வளங்களைப் பெருக்கவோ எந்த முயற்சிகளும் செய்யவில்லை எதற்கும் டெல்லியின் அனுமதியைப் பெறவேண்டிய நிலையில் தான் நமது அமைச்சர்கள் இருந்து வருகிறார்கள்

பிர்லா, டாட்டா, பஜாஜ் போன்ற பெரிய முதலாளிகள் கோடிக்கணக்கான ரூபாய்களைச் சம்பாதிக்கக் கூடிய தொழிற் ஸ்தாபனங்கள் வட நாட்டில் இருக்கிறது.

இன்று தென்னகம் பெங்கும் வடவர்களின் வேட்டைக் காடாக மாறி விட்டது இதை நமது அமைச்சர்கள் கவனிப்பதில்லை!

இங்கு ஏராளமான வரிகள் போடப்பட்டு வருகிறது அந்த வரிகள் பெரும்பாலும் டெல்லிக்குத் தான் செல்கிறது!

இங்கு விலைவாசிகள் விஷம் போல் ஏறி மக்கள் வருமானத்திற்கு மேல் உயர்ந்திருக்கிறது! இதைக் கட்டுப்படுத்த அமைச்சர்களுக்கு எந்தவித அக்கறையும் இல்லை. அதனால் தான் நாம் நம நாட்டில் செய்ய வேண்டியதை நாமே செய்யும் உரிமை நமக்கிருக்க வேண்டுமெனக் கேட்கிறோம் நம் நாட்டுக்குச் செய்ய வேண்டிய காரியங்களில் பிறருடைய அனுமதியோ, ஆலோசனையோ கூடாதென்கிறோம்.

நமது நாடு இன்று ஒரு இனத்தாருக்கு அடிமையாக இருக்கிறது. அது விடுதலை அடைய வேண்டும். நம் நாட்டை நாமே ஆள வேண்டும் என்கிறோம்! இதற்குப் பல காரணங்களை- ஆதாரங்களை காட்டி வருகிறோம், ஆனால் அதற்கு மறுப்பு கூறுவதை விட்டு நம்மை இழித்தும், பழித்தும் கூறிவிடுவதால் நாம கூறிவருவதற்குப் பதிலாகிவிடாது. அதற்குப் பதில் கூற முடியாததால் தான் நம்மை இழித்தும் பழித்தும் பேசுகிறார்கள் அதற்காக நாம் ஏன் கவலைப்பட வேண்டும்!

நமது நாட்டில் வசூலிக்குப் பல வரிகள், நமது மக்கள் கொடுக்கும், பல வரிகள் டில்லி சர்க்காருக்குப் போகிறது! அதற்கு உதாரணமாக புகையிலை வரியை எடுத்துக் கொண்டால் அதற்கு எப்படி வரி விதிக்

(11ம் பக்கம் பார்க்க)

ராஜா மகள் கல்யாணம் லண்டனில் நடந்தது!

நிதி அமைச்சரே! மறக்க வேண்டாம்! மறக்க வேண்டாம்!

நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் கனம் சுப்பிரமண்யம்—"தி.மு.க. திராவிட நாடு கேட்பது, ஒருவன் ராஜா மகளை கல்யாணம் செய்துக் கொள்ள நிச்சயித்துக் கொண்டது போல் இருக்கிறது" என்று கூறி, பெரிய யாரும் சொல்ல முடியாத உதாரணத்தை சொல்லி விட்டதாக மகிழ்ச்சியடைகிறார்!

"யாரோ ஒருவன், ராஜா மகளை கல்யாணம் செய்துக் கொள்ள நிச்சயித்தால் அது நடக்குமா?" என்று பொருள் பட நிதி அமைச்சர் கிண்டல் செய்கிறார்!

அவருக்கு, உலகமும், மக்கள் சமுதாயம் இன்றுள்ள நிலையும் புரியாத காரணததால் தான் இந்த உதாரணத்தைக காட்டி திராவிட நாடு பிரச்சினையை கிண்டல் செய்திருக்கிறார்!

லண்டனில் நடந்த சம்பவத்தை மறந்து—பழைய மிட்டா, மிராசுகளின் ராஜதர்பார் தோரணையில் பேசுவது கேலிக்குரிய விஷயமாகவே இருக்கிறது!

இவர் எது நடக்காது என்று கூறினாரோ அது லண்டனில் நடந்து விட்டது! சாதாரண ஒரு பிரஜை பிரிட்டிஷ் இளவரசியை திருமணம் செய்துக கொண்டு—"திராவிட நாடு நிச்சயமாகக் கிடைக்கும்" என்பதற்கு ஆதாரம் காட்டி இருக்கிறார்!

சில பல நேரங்களிலே ஆந்திரத்தைச் சார்ந்த சஞ்சீவி ரெட்டியும், மலையாள, கன்னடப் பகுதிகளைச் சார்ந்த தலைவர்களும் "தென்னாடு ஒன்றுபட்டு வாழ வேண்டும்" என்று கருத்து பட பேசி வருகிறார்கள்! அதாவது ராஜா மகளை திருமணம் செய்து கொடுக்க சம்மதிக்கிறார்கள்!

ராஜ குடும்பத்தில் (வட நாட்டு சர்க்காரில்) அதிதியும், அட்டூழியமும் மலிய மலிய—"அந்த உறவு வேண்டாம—எங்கள் பெண் சாதாரண குடும்பத்தில் வாழ்க்கைப் பட்டால் போதும் என்று தான் சொல்லுவார்கள்!

ராஜ குடும்பததில காதல் இப்போது தான் அரும்பி இருக்கிறது! விரைவில் அது மலரும்! நிதி அமைச்சருக்கு ஒரு துளியும் சந்தேகம் வேண்டாம்! திருமணத்திற்கு நிதி அமைச்சரையும் அழைப்போம்—நேருவைப்போல் காஷ்மீர் கம்பளமும், மணியாலான சிகரெட்டப்பாவும் பரிசளிக்க வேண்டாம்—சாதாரண ஒரு கைத்தறி துண்டை அளித்தாலே போதும்!

நம் நாட்டின் மீது அக்கறையற்றவர்கள் நமது அமைச்சர்களாக இருக்கிறார்கள்!

அக்கறை உள்ளவர்கள் வரவழி செய்யுங்கள்!

(நெடுஞ்செழியன் பேச்சு)

(10ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டு வருகிற தென்பகுதி அறிவீர்கள் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு வருவதற்குள் பல வரிகள் விதிக்கப்படுகிறது!

ஒரு புகையிலை வியாபாரி புகையிலை விளையும் காட்டிற்குப் போய் புகையிலை வாங்கப் போனால் 100 பவுண்டு புகையிலை 25 ரூபாயுக்கு வாங்கினால் இந்திய சர்க்கார் புகையிலை வரி என்ற பெயரால் ஐம்பது ரூபாய் வரி விதிக்கிறார்கள்! இப்படி பல இடங்களுக்குப் போய் வரிகள் போட்டு புகையிலை வாங்கியவன் லாபத்தையும் வைத்து கடைசியில் சுருட்டு செய்யுமிடத்திற்குப் போகும் போது இருநூற்றைம்பது ரூபாயாகிவிடுகிறது. பின் சுருட்டு செய்யப்போகும் போது நானூற்றைம்பது ரூபாயாகிவிடுகிறது இப்படி ஏறுவதற்குக் காரணம் ஒவ்வொரு இடத்திற்குப் போகும் போது ஒவ்வொரு வித வரி விதிக்கப்படுகிறது.

இதை மட்டும் உதாரணத்திற்குக் கூறினேன் இதை போன்று பல கூற முடியும். இப்படிப் போடப்படுகிற வரி டில்லிக்குப் போகிறது, அந்தப் பணத்தை யெல்லாம் வடநாட்டின் வளத்திற்குச் செலவிடப்படுகிறது!

அங்கு பல அணைகட்டுகளும் தொழிற்சாலைகளும், புதிய இருப்பு பாதைகளும் போடப்பட்டு வருகிறது! அங்கு தான் பக்ரா நங்கல் அணைக்கட்டு, அங்கு தான் இரும்பு உருக்குத் தொழிற்சாலை வைக்கப்படுகிறது!

மற்றும் நாம் கொடுக்கும் வரிப் பணத்திலிருந்து ராணுவத்திற்கு ஏராளமாகச் செலவிடப்பட்டு வருகிறது! இதை யெல்லாம் கூறினால் ராணுவத்திற்கு செலவிடுவது எல்லைகளைப் பாதுகாக்க என்று கூறுகிறார்கள்.

எந்த எல்லையைப் பாதுகாக்கிறாய் எங்கள் நாட்டு எல்லைகளைப் பாதுகாக்கவா இராணுவத்தை வைத்திருக்கிறாய் உன் எல்லையைக் காப்பாற்ற ராணுவத்தை வைத்திருக்கிறாய. அதற்கு நாங்கள் வரிதர வேண்டுமா? எங்கள் எல்லையில் ஆபத்தோ, தகராறோ இல்லையே உன் எல்லையின் பாதுகாப்புக்காக சுமார் முன்னூறு கோடி ரூபாய்க்கு மேல் செலவழிக்கிறாய் உனக்கு சீனா படையெடுப்பு, காஷ்மீர் பாதுகாப்பு என்று உங்கள் நாட்டின் பாதுகாப்புக்காக எங்கள் வரிப்பணத்திலிருந்து செலவிட்டு விட்டு எங்கள் நாட்டுக்கு நன்மை பயக்கும் படியான எந்தக் காரியமும் செய்யவில்லை. இதைக் கேட்டால் கோபம் வருகிறது. நாட்டைத் துண்டு போடுகிறோம் துவேஷத்தைக் கிளப்புகிறோம், என்று கூறுகிறார்கள் ஆகவே நாம் டெல்லியின் பிடியிலிருந்து விடுதலை பெற்று நமது இன்பத் திராவிட நாட்டைப்பெற நாமெ எல்லாம் ஒன்று பட வேண்டும்.

நம்முடைய மாநில அமைச்சர்கள் எப்பொழுதும் சுற்றிக் கொண்டே வருகிறார்கள்! அவர்களது சம்பளத்தைத் தவிர பிரயாணப் படிகள் வருடம் ஒன்பதனாயிரம் பத்தாயிரம் என்று வாங்குகிறார்கள் இவர்கள் ஏழை பங்காளர்கள், ஏழைகளுக்காக வாழ்பவர்கள் என்று கூறிக் கொண்டு ஏழைகளின் வரிப்பணத்திலிருந்து ஆயிரக்கணக்கான ரூபாய்களை பிரயாணப்படியாகப் பெறுகிறார்கள்.

இவர்கள் படியைக் கொண்டு தான் போகின்ற இடங்களில் செலவழிக்கிறார்களா? அன்று வெள்ளைக்கார சர்க்காரில் பிரயாணப்படியின் மூலம் ஏராளமான பணம் கொள்ளை போகிறதென்று கூறியவர்கள் இன்று இவர்கள் ஏராளமான பணத்தைப் பிரயாணப் படியின் மூலம் பெற்று வருகிறார்கள்,

இது இவர்களோடு மட்டும் நின்று விடுகிறதா? இவர்கள் பின்னால் போலீஸ்காரர்கள், அதிகாரிகள் சுற்றுகிறார்கள். அவர்களுக்கு படிகள், இப்படி ஏழைகளின் பணத்தை விரயமாக்கி வருகிறார்கள். மக்களின் தேவைக்கு — அவர்களின் வாழ்க்கை வசதிக்கு வேண்டியதைச் செய்யாது இப்படிச் சுற்றிக் கொண்டிருப்பது தான் மக்கள் பணியா? மக்களிடத்தில் சென்று மக்கள் குறைகளை எடுத்துக் கூறுவதற்கு—அன்றாடம் மக்களைச் சந்திப்பதற்கும் அரசினர் தடை போடுகிறார்கள் கூட்டங்கள் கூட்டுவதற்கு நமக்கு அனுமதி கொடுப்பதில் பல தொல்லைகள் தரப்பட்டு வருகிறது ஆகவே நீங்களெல்லாம் ஒற்றுமையாகவும். கட்டுப்பாட்டுடனிருந்து நமது கழகத்தை வளர்ப்பதுடன், எதிர்காலத்தில் கழகம் இடும் கட்டளையை ஏற்று பணிபுரிந்து நமது இன்பத் திராவிடத்தை அடைய முன் வரவேண்டுமென்று கேட்டு உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

வணக்கம்.

கழகக் கட்டளையைத் தாங்கி என் கடமையைச் செய்வேன்!

கே.ஆர். ராமசாமி

(9ம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற வேண்டு மென்ற ஆர்வமுமே காரணமாகும். அது மட்டுமல்ல பெற்ற தாய் தந்தையர்—மனைவி மக்களை விட நமது அண்ணா அவர்கள் மேம்பட்டவர் அவர் நமதுநாட்டு விடுதலைக்காக—ஏழை பாட்டாளி மக்களின் துயர் துடைப்பதற்காகப் பாடுபடுகின்றவர் என்று நினைப்பதால் தான்!

என்னை நமது அண்ணா அவர்கள் மேல் சட்ட சபைக்கு கழகத்தின் சார்பில் நிறுத்தினார் பல எம். எல். ஏக்களிடம் எனக்காகப் போய் அண்ணா ஓட்டு கேட்டார். பலரிடம் அண்ணா அவர்கள் சென்று ஓட்டுக் கேட்கும் போது என் மனம் வேதனைப்பட்டது!

நான் அண்ணா அவர்களுடன் செல்வேனே ஒழிய ஓட்டுகேட்க மாட்டேன்! தலை குனிந்து நிற்பேன். பின் அண்ணா அவர்கள் காரில் வரும் போது கேட்பார்" என்ன ராமசாமி உனக்காக நான் ஓட்டுக் கேட்கிறேன், நீ ஒன்றும் கேட்க மாட்டேன் ! என்கிறாயே" என்று!

நான் அவர்களிடம் கூறினேன். "அண்ணா மன்னியுங்கள்! நான் யாரிடமும் போய் எதுவும் கேட்டுப் பழக்கமில்லை! அவர்களிடம் ஓட்டு கேட்பதற்கு வெட்கமாக இருக்கிறது" என்று கூறினேன்! அண்ணா அவர்கள் கேட்டார்கள்! நீ தானே எல்லோரிடம் பேச வேண்டும், ஓட்டு கேட்க வேண்டும்" என்று கூறினார்.

நான் உடனே அண்ணா அவர்களிடம் கூறினேன் "அண்ணா" உங்கள் வார்த்தையால், நீங்கள் மற்றவர்களிடம் எனக்காக ஓட்டு கேட்டதைப் பார்த்தேன். இனி பாருங்கள் என் திறமையை 62ம் ஆண்டு வரும் தேர்தலில் யார் யாரிடம் எப்படி எப்படி ஓட்டு கேட்பது என்ன பேசுவது என்பதை அறிந்து கொண்டேன். அப்போது நீங்கள் மகிழும் படி தென்னகம் எங்கும் சென்று பணியாற்றுகிறேன்! நம் கழகம் மகத்தான வெற்றியடையும் படி நான் உழைக்கிறேன்" என்று கூறினேன்! நான் கூறியதைக்கேட்டு அண்ணா அவர்கள் மகிழ்வுடன் சிரித்தார்!

தேர்தல் தினத்தன்று பல எம்.எல் ஏக்கள் ஓட்டு போட்டு வந்தார்கள். ஆனால் அண்ணா அவர்களுக்கு எனக்கு ஓட்டளிப்பதாக வாக்களித்தவர்கள் மீது சந்தேகம் பிறந்தது! நான் வெற்றி பெற மாட்டேன் என்று தோன்றியது, உடனே என்னிடம் அண்ணா அவர்கள் வந்து "ராமசாமி" நமக்கு வாக்களிக்கிறேன் என்று கூறியவர்களில் சிலர் ஓட்டுப் போட்டிருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன், நீ ஒருக்கால் தோற்றால் சகிக்கமாட்டாய் ஆகவே நாம் வீட்டிற்குச் செல்லுவோம்" என்று என்னை அழைத்தார். நான் சொன்னேன் "நீங்கள் வீட்டிற்குச் செல்லுங்கள் நான் எதுவரினும், அது தோல்வியே யாயினும் வெற்றியேயாயினும் ஏற்பேன். நீங்கள் போதித்த எதையும் தாங்கும் இதயம் எனக்குண்டு" என்றேன்.

நான் வெற்றி பெற்றேன் என் கடமையை கழகத்தின் கட்டளைத்தாங்கி பணி செய்வேன். நீங்களெல்லாம் வரும் பொதுத் தேர்தலுக்கு இப்பொழுதிருந்தே பணியாற்ற முன் வாருங்கள். உண்டியலில்பணம் போடுங்கள்

நாம் ஆலமரத்தடியில் கையில் ஒரு காசுமில்லாது நம் கழகத்தைத் துவக்கினோம்! யாரும் கண்டு பிரமிக்கும் படி வளர்ந்திருக்கிறோம்! இனியும் உங்கள் ஆதரவைத் தாருங்கள் இழந்த நாட்டை மீட்போம், எனக்கு இந்த மன்றத்தார் பாராட்டியதற்கும் இவ்வளவு நெருக்கடியில் நீங்கள் கூடியிருப்பதற்கும் எனது நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்! வணக்கம்.

தூற்றுது புகழவா செய்வார்

நமது கழகத்தையும், நம்மையும் மாற்றார் தூற்றுகிறார்கள் என்று கூறுகிறார்கள், தூற்றாமல் புகழவா செய்வார்கள்.

நாம் இந்தப் பத்தாண்டுகளில் யாரும் எதிர்பாரத வண்ணம் வளர்ந்திருக்கிறோம்! காங்கிரஸ் சரித்திரத்தையும் பாருங்கள் எல்லா சக்திகளைப் படைத்த காங்கிரசே பத்தாண்டுகளில் இப்படி வளரவில்லை என்றால் நம்மைத் தூற்றத் தானே செய்வார்கள். நீங்கள் அதைப்பற்றி கவலைபடாமல். அடுத்த தேர்தலில் கழகம் வெற்றி பெற உண்டியலில் காசுபோட்டு ஆதரியுங்கள்,

—அறிஞர் அண்ணா

Registered as a News Paper in CEYLON

இலங்கையில் 20 சதம்

Regd. No.M.7074 **MALAIMANI** விலை 16 காசு Phone No.83285

கோட்டையில் நம் கொடி பறந்தாட கழகத்தை வெற்றி பெற வையுங்கள்!

அடுத்த தேர்தலில் நம் வெற்றி உறுதி!

அயராது உழைத்தால் எதையுமே சாதிக்கலாம்!

நடிப்பிசைப் புலவர் சங்கநாதம் !

சென்னை ஏழுகிணறு பாரக்ஸ் தெருவில் நடைபெற்ற இலட்சிய நடிகர் நாடகமன்ற ஆண்டுவிழாவும், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள் பாராட்டு விழாவும் நடை பெற்ற போது பாராட்டு விழாவிற்கு நன்றி தெரிவித்து கே.ஆர், ராமசாமி அவர்கள் பேசியதாவது.

மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே! அறிஞர் அண்ணு அவர்களே!! அருமை நண்பர்களே பெரியோர்களே !!

இன்று நீங்கள், நான் மேல் சபை அங்கத்தினராக நின்று வெற்றி பெற்றதற்காக பாராட்டிதழ் வாசித்துக் கொடுத்ததும், கைத்தறி ஆடைகள், மலர்மாலைகள் சூட்டியும் என்னைப் பெருமைப்படுத்தியதற்காக என் நன்றியையும் வணக்கத்தையும் முதவில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலட்சிய நடிகர் மன்றம் என்ற பெயரால் ஒரு மன்றத்தை ஏற்படுத்தி இந்த வட்டத்தில் நமது இயக்கப் பணிகளைச் செய்து வரும் இம்மன்றத்தாரை நான் பாராட்டுவதுடன் இம்மன்றம் என்றும் நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்று ஆசைபபடுகிறேன்.

நமது கழகம் இன்றைய தினம் எந்த தேர்தலில் போட்டியிட்டாலும் மக்களின் ஆதரவு பெற்று நாம் வெற்றி பெறுவோம் என்று நமது எதிரிகளும் அஞ்சும் நிலைமைக்கு நாம் வளர்ந்திருக்கிறோம்,

இன்று இந்தக் கூட்டம் நடைபெறுவதற்கும் நமது அருமைத் தலைவர் அறிஞர் அண்ணு அவர்கள் பேச்சைக் கேட்பதற்கும் முடியாமல் தடை செய்ய அரசினர் முயன்றனர். ஆனல் அரசினர் எண்ணம் பலிக்கவில்லை.

இழந்த நம் பொன்னட்டை— ஆண்ட நம் திருநாட்டை மீட்பதற்காகப் போராடும் வீரர்களாகிய நமக்கு—அண்ட வந்த ஒரு கூட்டத்தினர் நம்மை அடிமைப் படுத்தி வரும் ஒரு கூட்டத்தினரிடமிருந்து நமது நாட்டை விடுதலைப்பெற போராடுகின்ற நமக்கு பேசுவதற்கும்—மக்களிடம் நம் கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்கும் இந்த சர்க்கார் தடை போடுகிறது. ஆனலும் விடுதலை வீரர்களாகிய நமக்கு இந்த வீட்டின் மேல் மாடியில் பேசுவதற்கு அனுமதி கொடுத்த இந்த வீட்டுச் சொந்தக்காரருக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று நமது கழகம் வளர்ந்திருப்பதைக் கண்டு மாற்ருரும் அரசினரும் மிரளுகின்றனர். நம்மை எப்படி அடக்குவது என்று திட்டம் தீட்டுகின்றனர்.

திராவிட முன்னேற்றககழகம் இன்று நாட்டில் கூட்டங்கள் கூட்டி மக்களுக்கு தனது கருத்துக்களை எடுத்துக் கூறி வருகிறது. கூட்டங்களுக்கு ஏராளமான மக்கள் வந்து கூடி நமது தலைவர்கள் சொல்லும் கருத்தினை நன்கு கேட்டு நமது கழகத்திற்கு பெரும் பான்மையான ஆதரவு கொடுத்து வருகிருர்கள்.

நாம் இன்று மாடி மீது நமது கூட்டத்தை நடத்துகிரும். அப்படியிருந்தும் ஏராளமான மக்கள் கீழே யிருந்து நாம் கூறுவதைக் கேட்கின்றனர். நாம் மாடி மீது கூட்டம் கூட்டுவதால் பல தாய்மார்கள் வீட்டிலிருந்தே நமது அண்ணு அவர்கள் பேச்சைக்கேட்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ளார்கள்,

நம்முடைய நாடு இன்று வடநாட்டுக்கு அடிமையாகி நமது மக்கள் வாழ்வதற்கு வசதியற்று பெரும் தொல்லைகள் பட்டு வாழ்கிருர்கள்!

இந்த நிலையை மாற்றுவதற்கும், நமது நாட்டை விடுதலையடையச் செய்வதற்கும் நமது கழகம் அரும்பாடு பட்டு வருகிறது.

நம்முடைய கழகத்திற்கு நாட்டு மக்களின் ஆதரவு பெருகி வருவதைக் கண்டு மாற்ருரும். அரசினரும் அஞ்சுகின்றனர்!

1962-ம் வருடம் வருகின்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி யடைவதற்காக இப்போதிருந்தே பணி செய்ய தொடங்கி விட்டது!

நாம் இனி வாளாயிருக்கக் கூடாது. நாம் அடுத்த தேர்தலில் காங்கிரசை தோல்வி யடையச் செய்வதுடன் நமது மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும்.

இப்போது சட்ட மன்றத்தில் நமது அண்ணு அவர்கள் தலைமையில் நமது தோழர்கள் 15 பேர்கள் பணியாற்றுகிருர்கள். அடுத்த தேர்தலில் நாம் 150 பேர்கள் செல்ல வேண்டும்.

இதை நாம் நிச்சயம் செய்ய வேண்டும்!

அப்படி சட்ட மன்றத்திற்கு நாம் 150 பேர்கள் சென்ருல் அதை வைத்து நமது நாட்டை நாம் பெறலாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் சென்னை மேல் சபை உறுப்பினராக வெற்றி பெற்றிருக்கிறேன!

நான் இது வரை ஆற்றிவந்த பணிகளை விட இனி தீவிரமாகப் பணியாற்றுவேன். நான் தென்னகத்தில் பல இடங்களுக்குப் போய் வந்திருக்கிறேன். அங்கெல்லாம் நமது கழகம் வளர்ந்து மக்களெல்லாம் நம்மை உற்சாகத்துடன் ஆதரித்து வருகிருர்கள். அதைக் கண்டு எனக்கும் 25 வயது வாலிபனுக்கிருக்கும் உணர்ச்சியும் வலிவும் ஏற்பட்டிருக்கிறது.

நான் மேல் சபைக் கூட்டத்திற்காக போகும் போது கோட்டையின் மீது பறக்கும் காங்கிரஸ் கொடியைப் பார்த்தேன், ஒரு சிறிய கொடியும் ஒரு பெரிய கொடியும் பறக்கிறது. அதைப் பார்க்கும் போது எனக்கு ஒரு உணர்ச்சி பொங்கிற்று. "நம்முடைய கொடி என்று கோட்டையின் மீது பறக்கும்" என்ற ஆர்வம் தூண்டிற்று நிச்சயம் கோட்டையின் மீது நமது கொடி பறக்கும். அடுத்த தேர்தலில் நாம் வெற்றி பெறுவோம். அன்று நமது கொடி கோட்டையின் உச்சியில் பறக்கும் இதை நான் வேடிக்கைக்காகச் சொல்லவில்லை! இன்று மக்களிடம் விடுதலை உணர்ச்சி பொங்கி வருகிறது. நாட்டை மீட்க வேண்டுமென்ற ஆர்வம் எங்கும் பரவி வருகிறது அடுத்த தேர்தலில் நாம் அவசியம் வெற்றி பெறுவோம்! அதற்காக நீங்களெல்லாம் இன்றிலிருந்தே பாடுபடுங்கள்!

அடுத்த தேர்தலில் நாம் வெற்றி பெற வேண்டுமென்று கூறுவது நாம் ஆட்சிக்குப் போக வேண்டு மென்பதற்காகவல்ல. மந்திரி பதவியில் இருக்கவேண்டு மென்பதற்காகவல்ல.

நம் நாடு விடுதலை அடைய வேண்டும். நமது மக்கள் வடவர் ஆட்சியால் படும் தொல்லைகள் நீங்க வேண்டும், மக்கள் இன்பமாக வாழ வேண்டும். அதற்காகவே நாம் தேர்தலில் வெற்றி பெற வேண்டும்.

பதவியில் யார் வேண்டுமானுலும் இருக்கட்டும்

நம்முடைய திராவிட நாடு பிரிந்து நமது மக்கள் இன்பமாக வாழ வேண்டும், பலர் திராவிட நாடு வாழ முடியுமா என்று கேட்கின்றனர். நன்ருக வாழ முடியும். நமது நாட்டில் எல்லா வளமும் இருக்கிறது ஏன் வாழ முடியாது.

இன்று தென்னகத்து மக்கள் நல்ல உணர்ச்சியும், ஆர்வமும் பெற்று நமது இலட்சியம் எங்கும் பரவி வருகிறது.

சமீபத்தில் நமது அண்ணு அவர்கள் தஞ்சை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்து வந்தார்கள் மக்களின் ஆர்வம் எல்லையற்று பொங்கி வழிந்தது. போகின்ற இடங்களிளெல்லாம் அண்ணு அவர்கள் சொல்லும் கருத்துக்களைக் கேட்க மக்கள் ஒரே ஆர்வத்தோடு இருந்தனர்!

நானும் அறிஞர் அண்ணு அவர்களும் ஒரு கிராமத்தில் நடைபெறும் ஒரு கூட்டத்திற்காக காரில் போய்க் கொண்டிருக்கிறோம்! ஒரு விவசாயி ஒரு பெரிய ரோஜாப்பூ மாலையைக் கட்டி துணியைப் போட்டு மூடிக் கொண்டு கூட்டத்தில் கலந்து கொள்ள ஓடிக் கொண்டிருந்தார்! நான் காரை நிறுத்தி அந்த விவசாயியை நோக்கி "எங்கேபோகிறீர்கள்" யாருக்கு இந்த மாலை? ஏன் துணி போட்டு மூடியிருக்கிறீர்கள்" என்று கேட்டேன அந்த விவசாயி மிகவும் மகிழ்ச்சியுடனும் அன்புடனும், ஆர்வத்துடனும் கூறினர்.

"எங்கள் அண்ணு வருகிருர்: அவர் பக்கத்து ஊரில் நடைபெறும் கூட்டத்தில் பேசபோகிருர் அவருக்கு நான் இந்த மாலைச் சூட்ட போகிறேன் மாலை கசங்காமல் இருக்க துணி போட்டு மூடிக் கொண்டு போகிறேன்" என்று.

ஏழை விவசாயி, மிகவும் துன்பத்துடன் வாழ்க்கையை நடத்தும்பாட்டாளி தான் பெறும் குறைந்த கூலியில், இப்படி ஆர்வத்துடன் மாலை வாங்கிக் கொண்டு போவதுடன் கிராமம் விட்டு. கிராமத்திற்குவருவதென்ருல் அதற்கு காரணம் என்ன?

நமது இலட்சியங்கள் மீது வைத்துள்ள பற்றும், அது

(1–ம் பக்கம் பார்க்க)

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும்: பி. எஸ். இளங்கோ, கல்விப்பிரகாசம் பிரஸ், 404, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5. அலுவலகம் 1-35, வாணியர் தெரு, சென்னை-14.